**PROTONTECH**




175, Main Street
Trincomalee

075 6602486



அறைவு 02 இயம் 40 May 31 - June 06, 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

Registered as a newspaper in Sri Lanka

பக்கங்கள் : 16 விலை : 30.00 பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்



**Banking Studies**

**IABF - DABF**

@

**Veal Business College**


# அகத்தியர் ஸ்தாபனம் நோக்கி கிழக்கின் இந்து அமைப்புக்கள் பவனி!!!

## கிழக்கு கட்டளைத்தளபதியின் அனுமதியை உதாசீனம் செய்து காவல்துறையும், படையினரும் அகத்திய தாபனத்திற்குள் நுழையத் தடைவிதிப்பு???

உலகில் அகத்தியமாமுனிவரால் பிரதிஸ்டை செய்யப்பட்ட ஒரேயொரு சிவலிங்கேஸ்வர ஆலயமான கங்குவேலி சிவன் கோவில் மற்றும் அகத்தியர் ஸ்தாபனத்தின் தொன்மையை உலகறியச் செய்யும் முயற்சிகளின் முதற்கட்ட நடவடிக்கையாக அகத்தியர் ஸ்தாபனம் நோக்கி நடைப்பவனியொன்றை மூதூர் இந்துக்குருமார் சங்கத்தினரும், கொக்கட்டிச்சோலையில் இயங்கும் இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியமும் ஏற்பாடு செய்துள்ளன.

13

## எங்களின் தீர்வுக்கு உங்களின் ஒத்துழைப்பு மிக மிக அவசியம்

### முதலமைச்சர் ஜெயலலிதாவுக்கு தலைவர் சம்பந்தன் கடிதம்



இலங்கைப் பிரச்சினைக்கு நீதியான தீர்வு ஒன்று எட்டப்படுவதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடரவேண்டும் என்று இந்தியப் பிரதமரிடம் நாம் கோரியுள்ளோம். அதற்கு உங்களின் ஒத்துழைப்பு மிகமிக அவசியம் என்று தங்களை வேண்டி நிற்கின்றோம் என.....

13



## நோயாளிகளைப் பாகுபடுத்தி பார்க்கும் வைத்தியர்கள்



மட்டக்களப்புப் போதனா வைத்திய சாலையில் நோயாளிகளைக் கவனிப்பதில் வைத்தியர்கள் பாகுபாடு காட்டுவதால் நோயாளிகள் கவனிப்பாரற்ற நிலைக்குத் தள்ளப்படுவதாகவும் அதன்காரணமாக அவர்களின் உயிர் கேள்விக் குறியாக்கப்பட்டுள்ளதாகவும் மட்டக்களப்பு மாவட்டச் செயலாளர் பி.எஸ்.எம். சாள்ஸ் தெரிவித்துள்ளார்

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக்குழுக் கூட்டத்திலேயே தனது அதிருப்தியை மாவட்டச் செயலாளர் வெளிப்படுத்தியுள்ளார். நோயாளிகளை 'இவர் எனது நோயாளி இல்லை' என வைத்தியர்கள் காட்டும் பாகுபாட்டாலேயே இந்த நிலை எழுந்துள்ளது எனத் தெரிவித்த அவர் இக்குற்றச்சாட்டு தொடர்பாகப் பல முறைப்பாடுகளைக் கடிதம்....

13

## திருமலை வளாகத்தின் நாட்டாரியல் ஆற்றுகை



13

# சம்பூர் அனல் மின்நிலையப் பணிகளைத் துரிதப்படுத்துங்கள்



இந்தியாவின் நிதியுதவியுடன் மேற்கொள்ளப்படும் திருகோணமலை சம்பூர் அனல் மின்சார திட்டத்தின் பணிகளை தீவிரப் படுத்துமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச உத்தரவிட்டுள்ளார்.

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் சத்தியப்பிரமாண நிகழ்வுக்கு சென்று திரும்பிய நிலையிலேயே ஜனாதிபதி இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார் என அவரது டுவிட்டர் தளம் தெளவிக்கின்றது

இத்திட்டத்தில் இந்தியாவுடன் மேற்கொள்ளப் பட்டுள்ள ஒப்பந்தத்தின் ஊடாக இலங்கை அனுபவிக்கவிருக்கும் அனுகூலங்களை விடப் பிரதிகூலங்களே அதிகம் என மின்சாரசபையின் உயரதிகாரிகள் உட்பட அறிவுசார் வல்லுனர்கள் தமது அதிருப்தியை வெளியிட்டு வரும் வேளையிலும் இத்திட்டத்தை நடைமுறைப்படுத்தும் நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு சனாதிபதி உத்தரவிட்டுள்ளார். இலங்கையுடன் தமது 512 மில்லியன் டொலர்கள் நிதியுதவியில் சம்பூரில் அனல் மின்சார திட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக இந்தியா கடந்த ஒக்டோபர் மாதத்தில் அறிவித்தது.

எனினும் அந்த பணிகள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை.

இந்த நிலையில் இந்தியா சென்று திரும்பியுள்ள சனாதிபதி குறித்த அனல் மின்சார திட்டத்தை தீவிரமாக முன்னெடுக்குமாறு ஜனாதிபதி ராஜபக்ச, மின்சக்தி எரிபொருள்துறை அமைச்சுக்கு உத்தரவிட்டுள்ளார். இத்திட்டம் தொடர்பாக புதிய பிரதமர் மோடியுடன் கலந்துரையாடப்பட்டதா? என்ற விடயம் இரு

## 6மணிக்குப் பின் தனியார் கல்வி நிலையங்கள் இல்லை




திருகோணமலை நகர எல்லைக்குள் செயற்படும் தனியார் கல்வி நிலையங்கள் மாலை 6 மணிக்குப் பின்னர் பிரத்தியேக வகுப்புக்களை நடத்தக் கூடாதென நகர சபைக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்று நடைபெற்ற நகர சபைக் கூட்டத்தில் நகர சபை உறுப்பினர் சத்தியசீலராஜா இந்தப் பிரேரணையை........

13


**English O/L Paper Classes**

for
Repeaters
&
Studying Students

@

**Veal Business College**

026-2227622 - 077 02 03 201


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
malaimurasu@hotmail.com 075-4252042

## அகத்திய தாபனமும் அதிர்வலைகளும்.....!

முரண்பாட்டைக் களைய முயற்சிக்காமல் இன்னும் அம்முரண்பாட்டை ஆழமாக்கும் முயற்சிகளிலேயே அரச எந்திரம் ஈடுபட்டுக்கொண்டிருப்பது தெளிவாகத் தெரிகின்றது.

தமிழ் மக்கள் மேற்கொள்ளும் ஒவ்வொரு சின்னச் சின்ன முயற்சிகளையும் பாதுகாப்புக் காரணங்களைக் காட்டி தடுக்க முற்படுவது, தமிழ் மக்கள் தமது நிலத்தை மீண்டும் தரச் சொல்லிக் கேட்டு மேற்கொள்ளும் ஆர்ப்பாட்டங்களுக்கு தப்பான காரணங்களை கற்பிப்பது போன்ற நடவடிக்கைகளையும் நிறுத்த அரசு தயாராகவில்லை.

கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் என்பது வரலாற்றுக் காலம் தொட்டே தமிழ்ச் சைவ மக்களின் தலம் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

இலங்கையின் வரலாற்றுப் புத்தகங்களில் கூட இத் தலத்தைப் பற்றியும் தாபனத்தைப் பற்றியும் பதிவுகள் இடப்பட்டுள்ளன.

இந்நிலையில் போரினால் அழிவுற்றுள்ள அத்தாபனத்தைப் புனருத்தாரணம் செய்வதில் என்ன தவறுள்ளது என்பதே இன்று மக்கள் முன் எழுந்திருக்கும் மிகப் பெரிய கேள்வியாகும்.

புதிதாக வணக்கத்தலங்களை உருவாக்குவதற்கான எந்த முயற்சியும் அங்கு நிகழவில்லை. ஏனெனில் புதிய வணக்கத் தலங்களை உருவாக்குவதற்கு மதம் சார்ந்த அமைச்சின் அனுமதி பெறப்பட வேண்டும் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது.

எனினும் இவ் வேளையில் திருகோணமலை நகரத்தில் திடீரென இரண்டு புத்தர் சிலைகள் அனுமதி பெற்றா நிறுவப்பட்டன என்பது கேள்விக்குறியாக உள்ளது. சைவக் கோவிலுக்கு மிக அண்மித்ததாக ஒரு சிலை நிறுவப்பட்ட போது சைவ மக்கள் எவ்வித எதிர்ப்பையும் காட்டவில்லை.

ஆனால் தமது வரலாற்றுக்காலத் திருத்தலமொன்றை புனருத்தாரணம் செய்வதைத் தடைசெய்ய மட்டும் அரசு வரிந்து கட்டிக்கொண்டு முன்நிற்பது ஏன்? அல்லது புனருத்தாரணம் செய்வதைத் தொல்பொருட்துறை என்னும் போர்வையில் பிற்போட்டுக்கொண்டிருப்பது ஏன்? என்ற கேள்விக்கான விடையாக அம் மக்களின் மனதில் என்ன பதில் வேர் ஊன்றப் போகின்றது?

வரலாற்றுக் காலத் திருத்தலமான கன்னியா வெந்நீரூற்றுக்கு நடந்த கதையை நாம் எல்லோரும் அறிவோம். அவ்வாறானதொரு நிலையைக் கங்குவேலி அகத்திய தாபனமும் எதிர்கொள்ளுமா?

மத அடிப்படைவாதத்தின் கண்கொண்டு ஏனைய மக்களின் மத நடவடிக்கைகளை நோக்க முற்படும் அனைவரும், தாமே அம்மத அடிப்படைவாதத்தின் தளத்தில் நிற்கின்றார்கள் என்பதை உணர வேண்டும்.

ஆங்கிலேய ஆட்சிக்காலத்தில் திருகோணமலையில் சிவனையும், உமையையும் முருகனையும் ஒளித்து மறைத்து வணங்கியதையும், வீடுகளுக்குள்ளும் கிணறுகளுக்குள்ளும் சிலைகளைப் போட்டுக் காப்பாற்றியதையும் கொண்ட வரலாற்றை திருகோணமலைச் சைவர்கள் என்றும் மறந்ததில்லை.

உணர்திறன் கொண்ட விடயமாக இவ்விடயம் இருப்பதால் அரசின் தலையீடு அல்லது முடிவொன்று கங்குவேலி அகத்தியர் தாபனம் தொடர்பாக மிக விரைவில் எட்டப்பட வேண்டும். அவ்வாறு எட்டப்படாவிட்டால் இவ்விடயம் மூதூரில் ஓர் அசாதாரண நிலைமையை ஏற்படுத்திவிடும் என்பதுடன் தமிழர்கள் மத்தியில் அதிர்வலைகளையும் ஏற்படுத்தும் என்பதுதான் உண்மை.

## தடைசெய்யப்பட்டவலைகளுடன் மீனவர் கைது

திருகோணமலை கடற்பரப்பில் 25 மீனவர்கள் கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

தடைசெய்யப்பட்ட வலைகளை பயன்படுத்தி, மீன்பிடி நடவடிக்கையில் ஈடுபட்டவர்களே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளதாக கடற்படையின் பேச்சாளர் கொமாண்டர் கோசல வர்ணகுலசூரிய கூறினார்.

மீனவர்களின் 03 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் மேலதிக விசாரணைகளுக்காக சீனன்குடா காவல்துறையிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்தனர்.

## தூக்கில் தொங்கிய 15வயதுச் சிறுவன்



மட்டக்களப்பு மாவட்டத்தின் வெல்லாவெளி காவல்துறைப் பிரிவுக்குட்பட்ட திக்கோடையில் தூக்கில் தொங்கிய நிலையில் சிறுவன் ஒருவனின் சடலத்தை வெல்லாவெளி காவல்துறையினர் மீட்டுள்ளனர்.

திக்கோடை, 50 வீட்டுத்திட்டத்தினை சேர்ந்த பேரின்பம் ஜீதன் (15வயது) என்ற சிறுவனே தூக்கில் தொங்கிய நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இவரது சடலம் மீட்கப்பட்டு மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைக்காக கொண்டுசெல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தனிப்பட்ட பிரச்சினை காரணமாகவே இவர் தூக்கில் தொங்கியுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். இத்தற்கொலை தொடர்பிலான விசாரணையை வெல்லாவெளி காவல்துறை மேற்கொண்டு வருகின்றனர்.

## பணிப்பெண்கள் தாய்மையடைவது அதிகரித்துள்ளது



வெளிநாட்டு வேலை வாய்ப்புகளுக்காக சென்று கருவுற்ற நிலையில் திரும்பும் இலங்கை பணிப் பெண்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 12 மாத காலப் பகுதியில் இவ்வாறு 300க்கும் அதிகமான பெண்கள் வெளிநாடுகளுக்கு தொழில்வாப்புக்காக சென்று, கருவுற்ற நிலையில் நாடு திரும்பி இருப்பதாக கூறப்படுகிறது.

வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணிமனையின் முகாமையாளர் மங்கள ரந்தெனிய இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த பணிப்பெண்களின் தனிப்பட்ட நடத்தைகளே இதற்கான காரணம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## மின் தாக்கிப் பெண் மரணம்

திருகோணமலை சீனக்குடா காவல்துறைப் பிரிவிற்குட்பட்ட லங்காபாலம் எனுமிடத்தில் மின்சாரம் தாக்கி பெண்ணொருவர் உயிரிழந்துள்ளார்.

இந்த சம்பவம் நேற்று மாலை இடம்பெற்றுள்ளது.

வீட்டில் துணி துவைக்கும் இயந்திரத்தில் துணிகளை துவைக்கும்போதே பெண் மீது மின்சாரம் தாக்கியுள்ளதாக காவல்துறை குறிப்பிடுகின்றனர்.

## சீவனோபாயத்திற்காக விறகு எடுக்கச் சென்றவர்கள் கைது

கிண்ணியா கண்டக்காடு பகுதியில் விறகு எடுக்கச்சென்ற நான்கு மாட்டு வண்டிகளையும் அதன் சொந்தக்காரர்களையும் இராணுவத்தினர் கைது செய்து கிண்ணியா காவல்துறையினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

இச்சம்பவம் கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது. கைது செய்யப்பட்ட நான்கு மாட்டு வண்டிகளிலும் விறகு காணப்பட்டதுடன் சட்டவிரோதமான முறையில் விறகு பெற்றதாக கூறி அவர்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட நான்கு பேரும் அன்றைய தினமே திருகோணமலை நீதிமன்றத்தில் முன்நிலைப்படுத்தப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

தமது ஜீவனோபாயத் தொழில் காட்டில் விறகு எடுப்பது என்றும் இனி இத்தகைய தொழிலை செய்ய முடியாதளவுக்கு கெடுபிடி அதிகரித்துள்ளதாகவும் அத்தொழிலாளர்கள் தெரிவித்துள்ளனர்.

## கதிர்காம யாத்திரைக்குழு திருமலையை வந்தடைந்தது

வருடாந்த கதிர்காம பாதயாத்திரை யாழ்ப்பாணம் தொண்டைமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்திலிருந்து ஆரம்பமாகி 14 தினங்களின் பின் நேற்று சனிக்கிழமை காலை திருகோணமலை கோபாலபுரம் ஸ்ரீ சித்திரவேலவனார் ஆலயத்தை சென்றடைந்தது. தலைமைதாங்கி நடாத்திவரும் காரைதீவு ஸ்ரீ நந்தவனப் பிள்ளையார் ஆலய தர்மகர்த்தா ச.மகேஸ்வரன் (வேல்சாமி) தலைமையிலான 42பேர் கொண்ட குழுவினருக்கு அங்கு ஆலய தலைவர் இராஜேந்திரா சுவாமி தலைமையில் மகத்தான வரவேற்பளிக்கப்பட்டது



## ஜமாலியா மக்தப் அல்குர்ஆன் மதரஸா ஆரம்ப வைபவம்

(பஹ்மியூஸுப்)

அகில இலங்கை ஜம்மியதுல் உலமாவின் வழிகாட்டலின் கீழ் திருகோணமலை ஜமாலியா முஹைதீன் ஜும்ஆ பள்ளிவாசலின் மேற்பார்வையில் " மக்தப் அல்குர்ஆன் மதரஸா " கடந்த 25.05.2014ஆம் திகதி ஞயிற்றுக்கிழமை அஸர் தொழுகையின் பின்னர் மக்தப் ஆரம்ப வைபவம் நடைபெற்றது.

பள்ளிவாசல் தலைவர் அல்ஹாஜ் ஏ.ஜே.மஹ்ரூப் அவர்களின் தலைமையில் உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கபப்பட்டது. அதிதிகளாக மௌலவி கே.ஆர்.எம். இன்ஸாப் (இன்ஆமி) - தலைவர், அகில இலங்கை ஜம்மியதுல் உலமா - கந்தளாய் கிளை, அல்ஹாஜ் எஸ்.எம்.அனிபா (ஓய்வு பெற்ற ஆசிரியர் ) திருகோணமலை மாவட்ட மக்தப் பொறுப்பாளர், மற்றும் பிரதேச உலமாக்கள் பள்ளிவாசல்கள் நிர்வாகிகள், சங்கங்களின் பிரதிநிதிகள், பிள்ளைகளின் பெற்றார்கள், நலன்விரும்பிகள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.



## கட்டாக்காலிகளைப் பொதுநூலகத்தில் கட்டிய பிரதேசசபையினர்



தம்பலகாமத்தில் வீதிகளில் அலைந்து திரியும் கால்நடைகளை பிடித்து கட்டும் செய்றபாட்டை பிரதேச சபை ஊழியர்கள் மேற்கொண்டு வருகின்றார்கள். கோயிலடியில் அமைந்துள்ள பொது நூல் நிலைய வளவில் இவைகள் அடைக்கப்பட்டுள்ளது.

கால்நடைகள் அங்கு வளர்க்கப்பட்டு வரும் அழகு மரங்களை ருசி பார்த்து வருகின்றது. இதனால் நூல்நிலையத்தின் அழகு கெட்டுப்போகின்றது. இச்செயற்பாட்டினை நிறுத்துமாறு வாசகர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (கதிரவன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராசபக்சேவின் வருகையை எதிர்த்தது தவறு -

## -கேணல் ஹரிஹரன்-



தமிழக அரசியல் கட்சிகள் ராஜபக்சவின் வருகையை இவ்வளவு கடுமையாக எதிர்த்தது, இங்குள்ள தமிழர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த நலன்களுக்கு விரோதமானது.

மோடியின் மேடைப் பேச்சுக்களை நாம் உற்றுக் கவனித்தால் சில விஷயங்களைப் புரிந்துகொள்ள முடியும். இந்தியப் பாரம்பரியத்தின் வேர்களை வளர்த்தெடுக்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்குள் ஊறிப்போய் இருப்பதை அதில் நாம் உணர முடியும். அந்த உணர்வுதான், சார்க் நாடுகளின் தலைவர்களை அவருடைய பதவியேற்புக்கு அழைக்க வைத்துள்ளது.

இந்திய இரத்தத்தில் ஊறிப்போய் உள்ள பாரம்பரியப் பழக்கத்தின்படி விடுக்கப்பட்ட அழைப்பாக மட்டுமே இதைப் பார்க்க வேண்டும். பக்கத்து வீட்டுக்காரனோடு தீராத பகை இருந்தாலும், நம் வீட்டில் நடக்கும் சுப நிகழ்ச்சிகளுக்கு அவர்களை அழைப்போம் அல்லவா? அதுபோன்றதுதான் இந்தச் செயல்.

இந்த நிகழ்வால் பாகிஸ்தான், இலங்கை உடனான வெளியுறவுக் கொள்கைகள் அடியோடு மாறிவிடும் என்றோ அற்புதம் நிகழ்ந்துவிடும் என்றோ எதிர்பார்ப்பதிலும், இது மிகப்பெரிய இராஜதந்திர நடவடிக்கை என்று பாராட்டுவதிலும், எந்த அர்த்தமும் இல்லை. அப்படி எதுவும் நடந்துவிடவும் முடியாது.

வெளியுறவுக் கொள்கைகள் தொடர்பான முடிவுகள், இரு நாட்டுப் பிரச்னைகள் தொடர்பான பேச்சுவார்த்தைகள், அதற்கான ஆலோசனைகள், திட்டங்கள் எல்லாம் முற்றிலும் வேறு முகம் கொண்டவை.

அதே சமயம் தமிழக அரசியல் கட்சிகள் ராஜபக்சவின் வருகையை இவ்வளவு கடுமையாக எதிர்த்தது, இங்குள்ள தமிழர்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களின் ஒட்டுமொத்த நலன்களுக்கு விரோதமானது. இவர்கள் அனைவரும் தமிழர்களின் நலனில் அக்கறை காட்ட வேண்டும் என்று உண்மையாக நினைத்திருந்தால், நிச்சயமாக அவ்வளவு கடுமையாக ராஜபக்ச வருகையை எதிர்த்திருக்க மாட்டார்கள்.

தமிழக முதலமைச்சர் மற்றும் ஏனைய தமிழக அரசியல் கட்சிகளின் இந்த எதிர்ப்பு, அங்கு முள்வேலி முகாம்களுக்குள் அடைக்கப்பட்டு இருக்கும் தமிழர்களுக்கு இன்னும் மோசமான விளைவுகளைத்தான் ஏற்படுத்தும்.

முள்வேலி முகாம்களுக்குள் இருக்கும் தமிழர்களை அங்கிருந்து வெளிக்கொண்டுவர வேண்டுமானால், அந்த நாட்டில் தனி மெஜாரிட்டியுடன் இருக்கும் ராஜபக்சவோடு நீங்கள் சுமுக உறவை வளர்த்தால் மட்டுமே சாத்தியம்.

அப்படிப்பட்ட உறவை ஏற்படுத்த, இதுபோன்ற சமயங்களில் இவர்கள் அமைதியாக இருக்க வேண்டும். அதைவிடுத்து எதிர்ப்பதும் கோஷம் போடுவதும் கொடும்பாவி எரிப்பதும் கட்சிக்கு ஆள் சேர்க்கத்தான் பயன்படுமே தவிர, இலங்கைத் தமிழர்களின் நலனுக்கு உதவாது.

இன்றும் இலங்கையில் கொழும்பு உள்பட முக்கியமான நகரங்களில் வாணிபம் செய்துகொண்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள், தமிழ்நாட்டுத் தமிழர்கள். அது இங்குள்ள அரசியல்வாதிகள் அனைவருக்கும் தெரியும். அப்படிப்பட்ட சூழலில் இவர்கள் தெரிவிக்கும் எதிர்ப்பு என்ன மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை, யாரும் சிந்திப்பது இல்லை.

இன்றுள்ள உலக அரசியல் சூழலில் இந்திரா காந்தி பங்களாதேஷில் செய்த போர் அரசியலை செய்ய முடியாது. நம்மால் மட்டுமல்ல... அமெரிக்காவால்கூட அப்படிச் செய்ய முடியாது. அதனால்தான் சிரியா, லிபியா, உக்ரைன், வட கொரியா விவகாரத்தில் அமெரிக்கா அடக்கி வாசிக்கிறது.

அதுபோல், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நடத்தியது போன்ற போராளி இயக்கத்தை இனிமேல் எந்த நாட்டிலும் யாரும் நடத்த முடியாது. இதை எல்லாம் நன்றாக யோசித்துப் புரிந்துகொண்டு, தங்களின் அடிப்படையான அரசியல் நிலைப்பாட்டை தமிழக அரசியல் கட்சிகள் மாற்றி அமைக்க வேண்டும்.

மேலும், தமிழக அரசியல் கட்சிகள் ஒன்றைப் புரிந்துகொள்ள வேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினை மட்டுமே தமிழகத்தின் பிரச்னை அல்ல. இங்குள்ள பல பிரச்னைகளில் அதுவும் ஒரு பிரச்சினை. அதைப் புரிந்துகொள்ளாமல், ராஜபக்சவின் வருகையைக் காரணம் காட்டி, வலுவான பிரதமராக உருவெடுத்து இருக்கும் மோடியின் அழைப்பை நிராகரித்ததன் மூலம், தமிழகத்தின் நலனையும் இவர்கள் நிராகரித்துள்ளனர்.

ஏனென்றால், தமிழகத்தின் தயவில் மத்திய அமைச்சரவை நடந்துகொண்டிருந்தபோது, இவர்களில் 12 பேர் அங்கு அமைச்சர்களாக இருந்தபோதே, தமிழகத்துக்கு ஒரு நன்மையும் நடக்கவில்லை. இப்போது தொடக்கத்திலேயே மத்திய அரசை அவமதித்துவிட்டு, எந்த முகத்தோடு தமிழகத்துக்குத் தேவையான திட்டங்கள், நிதியுதவி ஆகியவற்றைப் போய் கேட்பார்கள்?

மத்திய அரசோடு சுமுக உறவு, அண்டை நாடுகளோடு இணக்கமான போக்கு ஆகியவற்றை வளர்க்க இவர்கள் முன்வர வேண்டும். அதுவே தமிழகத்துக்கும் தமிழர்களுக்கும் நன்மையை ஏற்படுத்தும்."" - தீர்க்கமாகச் சொல்கிறார் கேர்னல் ஹரிஹரன்.

### வாராந்த அலசல்

செய்திகள் பார்வைகள் எண்ணங்கள்

# மாபியாக்களுக்கும் நிதி நெருக்கடி

உலகில் தொடரும் பொருளாதாரப் நெருக்கடி இத்தாலியின் மாபியா (சட்டவிரோதக் குற்றவாளிக் கூட்டம்) கும்பல்களையும் பாதித்திருப்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

இத்தாலியின் மூத்த காவல்துறை அதிகாரி அலெஸ்ஸாண்ட்ரோ பான்சா கூறுவது உண்மையாக இருக்குமானால், இந்தப் பொருளாதார மந்த நிலை, இத்தாலியில் இருக்கும் சட்டவிரோத மாபியாக் குமபல்கள் "பாதுகாப்பு தருகிறோம்" என்ற பெயரில் நடத்தும் பணவேட்டை மோசடிகளையும் பாதித்துவிட்டிருக்கிறது என்பது உண்மை.

இந்த "பாதுகாப்பு" நடவடிக்கைகளின் , மூலம் மாபியாக் கும்பல்கள்களுக்குக் கிடைத்து வந்த பணத்தின் வரவு குறைந்து வருவதாகத் தெரிகிறது.

மாபியாக் கும்பல்களுக்கு, இந்த சட்டவிரோத பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகப் பணம் தந்து வந்த , கடைக்காரர்கள் மற்றும் வர்த்தக நிறுவனங்கள் தரும் பணத்தின் அளவு குறைந்து கொண்டே வருவதாக அலெஸ்ஸாண்ட்ரோ பான்சா குறிப்பிடுகிறார்.


இந்தப் "பாதுகாப்பு நடவடிக்கைகள்" மூலம் வரும் பணம் மிகவும் மோசமான அளவு குறைந்துவிட்டதாக ஒரு மாபியா குழுத் தலைவர் புகார் கூறியதாகத் தெரிகிறது.

சிறையில் அடைக்கப்பட்ட மாபியா குழு உறுப்பினர்களின் குடும்பங்களைப் பராமரிக்கத் தேவைப்படும் பணத்தைத் திரட்டுவதில் கூட பிரச்சினைகள் எழுவதாக அலெஸ்ஸாண்ட்ரோ பான்சா கூறினார்.

ஆனால் நெருக்கடியில் சிக்கித் தவிக்கும் மாபியாக் குழுக்களுக்கு இந்தப் பொருளாதார நெருக்கடி வேறு ஒரு சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கிறது. அதாவது சட்டவிரோதமாகப் பணம் கொடுத்தல், கறுப்புச்சந்தையில் தொழிலாளர்களை வேலையில் ஈடுபடுத்துதல், மற்றும் சட்டவிரோத கச்சாப் பொருட்களை வழங்குதல் போன்ற வேலைகளில் அவர்கள் ஈடுபடுவதன் மூலம் இந்த நெருக்கடியிலும் புதிய சந்தர்ப்பங்களை மாபியாக் கும்பல்கள் பெறுகின்றன என்கிறார் அவர்.




# சிரேட்ட காவல்துறை அத்தியட்சகர் அஜித் றோகண காவல்துறைப் பேச்சாளரா அல்லது சட்டத்தரணியா?



இலங்கையின் காவல்துறைப் பேச்சாளர் சிரேட்ட காவல்துறை அதியட்சகர் அஜித் ரோகண தன்னை உரு சட்டத்தரணியெனப் பல இடங்களில் சொல்வதில் பெருமைப்பட்டுக் கொள்பவர்.

ஆனால் காவல்துறையின் காவலில் இருந்த போது கொல்லப்பட்டவர்களின் எண்ணிக்கை முப்பத்தைந்தைத் தொட்டபோது அவர் வெளியிட்ட கருத்துக்கள் சட்டத்தரணியாக அவரது தொழில் முறை நடத்தையைக் கேள்விக்குறியாக்கியுள்ளதுடன் சட்டத்தரணிகளின் தொழில்முறை நடத்தையினை இலங்கையில் அமுலாக்கிவரும் இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்திற்குத் தலையிடியைக் கொடுப்பனவாகவும் அமைந்துள்ளது.

அஜித் ரோகண காவல்துறைப் பேச்சாளராகவும் சட்டத்தரணியாகவும் இருதுறையாற்றல்களில் அவர் செயற்பட்டாலும் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையில் அவர் காவல்துறைப் பேச்சாளராக மட்டுமே பேசுவதாக தெளிவாகக் குறிப்பிட வேண்டும். ஏனினில் அவர் பயிற்சிபெறும் சட்டத்தரணியல்ல என இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கத்தின் சட்ட ஆட்சிக்கான நிலையியற் குழுத்தலைவர் லால் விஜயநாயக்க தெரிவித்துள்ளார். மேலும் காவல்துறைப் பேச்சாளர் சட்டத்தரணிகளின் தொழில் நடத்தை விதிகளுக்கு ஒழுங்கி நடக்காது விட்டால் அவர் மீது ஒழுக்காற்று நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதைத் தவிர்க்க முடியாது என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

காவல்துறைப் பேச்சாளர் மிக முக்கிய விடயங்கள் தொடர்பாகப் பொய்யான கூற்றுக்களை முன்வைத்திருப்பதால், சட்டத்தரணியாக அவரது தொழில் நடத்தை தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்க ஆராயப்படுவதாகக் கடந்த புதன்கிழமை சட்டத்தரணிகள் சங்கத் தலைவர் உபுல் ஜயசூரிய தெரிவித்ததைத் தொடர்ந்து நிலையியற் குழுத்தலைவர் லால் விஜயநாயக்க தொடர்ந்து தெரிவிக்கையில் ரோகண பொது மக்களைத் தவறாக வழிநடத்துகின்றார். நேர்மையற்ற இந்நடத்தையில் சட்டத்தரணிகள் என்ற வகையில் ஒழுங்கு முறையற்றது. இவ்வொழுங்குமுறையற்ற நடவடிக்கைகள் தொடர்பாகப் பல சட்டத்தரணிகள் முறைப்பாடுகளை முன்வைத்திருப்பதுடன் தொழில் நிபுணத்துவத்தை ரோகணவின் நடவடிக்கைகள் கடுமையாகப் பாதிப்பதாகவும் தெரிவித்துள்ளனர்.

கைவிலங்கிடப்பட்ட சந்தேகநபர்கள் ஆயுதங்களைக் காட்டித்தருவதாக காவல்துறையினரைக் கூட்டிச் சென்று அவ்வாயுதத்தை அச் சந்தேகநபர்களே கைப்பற்றி, காவல்துறையினரைத் தாக்கத்தொடங்கியதால் காவல்துறையினர் தமது தற்பாதுகாப்புக் கருதி அச் சந்தேகநபர்களைச் சுட்டுக் கொன்றார்கள் என ரோகணவினால் வெளியிடப்படும் அறிக்கைகள் பொதுமக்களுக்கு உண்மையினை மறைப்பதுடன் கைவிலங்கிடப்பட்டவர்களால் ஆயுதத்தைக் கைப்பற்றிச் சுட முடியுமாடா என்ற அறிவுபூர்வமான மக்களின் கேள்வியறிவைக் கேலிக்குரியதாக்கின்றது என அவர் மேலும் தொடர்ந்தார்.

குற்றச்சாட்டுகள் வைக்கப்படுமிடத்து குறித்த சட்டத்தரணி சட்டத்தரணிகள் சங்கத்தின் நிபுணத்துவநடத்தை கோக்க நிலையியற் குழுவின் விசாரணைகளுக்கு முகங்கொடுக்க வேண்டியிருக்கும் எனத் தெரிவித்த அவர் சட்டத்தரணியின் நடத்தை ஒழுக்கவிதிகளுக்கு அப்பாற்பட்டிருப்பின் மீயுயர் நீதிமன்றத்திலேயே அவருக்கான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என லால் விஜயநாயக்க தெரிவித்தார். இதனைத் தவிர்க்க வேண்டுமாயின் ரோகண பொதுச் சந்திப்புக்களில் தானொரு சட்டத்தரணியென கூறக்கூடாது...

சிரேட்ட காவல்துறை அத்தியட்சகர் அஜித் ரோகண தானொரு சட்டதரணியென்பதை ஊடகச் சந்திப்புக்களில் சொல்லாமல் இனியாவது நிறுத்தி விடுவாரா?

(தொகுப்பு மாயன்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துயரச் சுமையுடன் வாழும் ஈழத்தமிழர்

பேராசிரியர் தயா சோமசுந்தரம்
மருத்துவ பீடம், யாழ் பல்கலைக்கழகம்

போர் நடைபெற்ற நாடுகளில், போரின் போது நடந்த குற்றங்களைக் கண்டறிந்து தண்டனை அல்லது மன்னிப்பு வழங்குவதைப் பிரதான நோக்கமாகக் கொண்டு முயற்சிப்பது மிக முக்கியமானது.

அதேவேளைபோரில் பாதிக்கப்பட்டவர்களுடைய உரிமைகளை, அவர்களுக்கு வழங்கவேண்டிய முழுமையான புனர்வாழ்வு விடயங்களைக் கவனிப்பதும் இன்றியமையாத வொன்றாகும். ஆயினும் இவ்வாறான போருக்குப் பின்னான சூழ்நிலையில் முழுமையான புனர்வாழ்வு கவனிக்கப்படாமல் இருப்பது கவலைக்குரியது. இங்கே முழுமையான புனர்வாழ்வு என்று குறிப்பிடுவது பாதிக்கப்பட்டவர்களின் சமூகபொருளாதார நிலைமைகளை மீளக்கட்டியெழுப்புவதும் உளசமூககலாசாரம் அம்சங்களைக் கவனிப்பதுமாகும்.

பொதுவாக அபிவிருத்தியில் இருந்துமக்கள் பயனைப் பெற்றுக்கொள்வார்கள் எனஎதிர்பார்க்க முடியுமாயினும் பாதிப்புக்களுக்குஉட்பட்டநிலையில் உள்ளவர்கள் வெறும் பொருளாதார அபிவிருத்திகளால் எதிர்பார்க்கப்பட்ட முழுமையான பயனைப் பெறாமல் போவதை ஆய்வுகள் நி'ரூபித்துள்ளன.

கொவுதமாலா (Guatemala) சியறாலியோன் (Sierra Leone) கிழக்குத் தீமோர் (East Timor) கொலம்பியா (Colombia) போன்ற நாடுகளை பாதிக்கப்பட்ட மக்கள் தங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு முதலிடம் கொடுக்கும் நாடுகளாகக்கிறிஸ்டின் இவான்ஸ் (Christine Evans-2012) குறிப்பிடுகின்றார். இந்நாடுகள் போரிற்கு பிற்பட்ட சூழ்நிலையில் உள்ளூரில் நிறுவப்பட்ட உண்மைகாண் ஆணைக்குழுக்களின் செயற்பாடுகள் மூலம் அனைத்துலகசமூகத்தினதும் ஐ.நாவினதும் உதவியைப் பெற்று தம்மை மீள்கட்டமைப்புச் செய்தமையானது போரின் பின்னர் பாதிக்கப்பட்ட மக்களைக் கொண்டிருக்கும் நாடுகளுக்கு முன்மாதிரியான ஒருசெயற்பாடாக அமைந்துள்ளது. இச்செயற்பாட்டினை மேற்கொள்வதற்கு ஐ.நாவும் அனைத்துலக குழுமங்களும் முக்கிய பங்களிப்பை அளிக்கலாம், எனினும் நாட்டுக்குரியஅரசமைப்பே இதற்குரிய அடிப்படையான முழுப்பொறுப்பையும் ஏற்றுக் கொண்டுபோர்க்காலத்தில் துன்புற்றவர்களுக்கு உரியஉதவிகளை வழங்க வேண்டும் என்றும் கிறிஸ்டியன் இவான்ஸ் வலியுறுத்தியுள்ளார்.

இச் செயற்பாடுகள் இடம்பெறாதவரையில் பாதிக்கப்பட்டவர்களுள் பெரும்பாலானவர்கள் தமது பாதிப்புத் தொடர்பாக முறையீடு செய்வதற்கான சந்தர்ப்பங்களைப் பெறுவதோ, முறையீடு செய்வதற்குரிய மனநிலையைப் பெறுவதோ, தங்களுக்குக் கொடுக்கப்படும் பதிலீடுகளைப்பெற்று பயன் பெறுவதோபெரும்பாலும் நிகழ்வது அரிதாகவே காணப்படுகின்றது.

கமிலாசமரசிங்க (Gameela Samarasinghe -2013) அவர்கள் இலங்கையில் உருவாக்கப்பட்டகற்றுக் கொண்டபாடங்களின் அடிப்படையிலான நல்லிணக்க ஆணைக்குழுவினால் (LLRC) சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையின் உள்ளீடு பற்றிவிளக்கும் போது, "மக்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கிய துன்பங்களும் அவற்றினால் உருவாகிய மனவடுக்களும் இருக்கின்றன என்பதை இவ்வாணைக்குழு ஏற்றுக்கொள்கின்றது" என்பதைச் சுட்டிக்காட்டுகின்றார்.

இவ்வாணைக்குழுவானது (LLRC) பாதிக்கப்பட்டமக்கள் எதிர்நோக்கும் துன்பங்களையும் அதனால் அவர்கள் எதிர்நோக்கி உள்ள மனவடுவினையும் கவனத்தில் எடுத்துஅவர்களுக்கு உளவளத்துணை வழங்கல், நீதிவழங்கல் ஆகிய பொறிமுறைகளை உருவாக்குதல், ந்'டஈடு கொடுத்தல், போன்ற விடயங்களைச் செயற்படுத்துமாறு முன்மொழிந்துள்ளது. இனங்களுக்கு இடையேமனஒருங்கிணைப்பும் சமாத்னமும் நடைமுறைக்கு வரவேண்டுமாயின் அதனைச் சட்டங்களிலும் அரசமைப்புகளிலும் பொருத்தமான மாற்றங்களைக் கொண்டுவருவதன் மூலம் தான் செயற்படுத்த முடியுமென வெளிப்படுத்தியுள்ளது.

லத்தீன் அமெரிக்காவில் உள்ள அனைத்து அமெரிக்க மனித உரிமைகள் நீதிமன்றம் (Inter-American Court of Human Rights) துன்பப்பட்டசமூகங்களுக்கு வழங்கவேண்டிய நன்மைகள் பற்றி மிகவிரிவான விளக்கங்களை வெளியிட்டுள்ளது. அவற்றுள் அந்நீதிமன்றம் பண்பாட்டு அம்சங்களையும் கணக்கில் எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். பண்பாட்டுஅம்சம் எனும்போது இறப்பு சார்ந்தகிரியைகள், சடங்குகள் போன்றவற்றை நினைவுகூருதல் போன்றவைஉள்ளடங்கும். இதுபோலவே ஐரோப்பிய மனிதஉரிமைகள் நீதிமன்றமும் (European Court of Human Rights) மனிதஉரிமைகள் பெரியளவில் நசுக்கப்பட்டபோது நிகழ்ந்தவற்றைக் கணிப்பில் எடுத்து நீதிவழங்க உரிய நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

வடமாகணத்தில் போரால் நலிவுற்றபிரதேசங்களில் சிலபொருளாதார உள்கட்டமைப்பு அபிவிருத்திகள் நிகழ்ந்துள்ளன. ஆனால் அவை பெருமளவிற்கு மேலெழுந்த வாரியான விருத்தியேயாகும் என்கின்றார் சர்வானந்தன் (Sarvananthan 2012). மேலும் இவை துன்புற்றோரின் உளசமூக நன்னிலைப்பாட்டை உருவாக்குவதற்கும் உதவவில்லை.

போர்முடிந்து ஐந்து வருடங்கள் கடந்த நிலையிலும், பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய நட்டஈடோ, சமூகமீளாக்கமோ, தேசிய ஒருமைப்பாடோ இன்னும் ஏற்படுத்தப்படவில்லை என்ற நிலையே காணப்படுகின்றது. சமூகம் அபிவிருத்தித் திட்டங்களால் முழுமையாகப் பயன் பெறவேண்டுமாயின் பொருளாதார அபிவிருத்திமட்டும் போதாது. அதற்குச் சமூகம் தனதுதனித்துவமான பெறுமானங்களையும் விழுமியங்களையும் மீள்கட்டமைப்புச் செய்துகொள்ளும் நிலையை அடையவேண்டும் என வீரக்கொடி மற்றும் பெர்ணான்டோ (Weerackody and Fernando ) போன்றவர்கள் 2011ல் சுட்டிக்காட்டியமை இங்கு கவனிக்கத்தக்கது.

அனைத்துலகச் சட்டம், ஆயுதப்போராட்டங்களால் பாதிக்கப்பட்டமக்கள் தமது சிதைக்கப்பட்ட வாழ்வியற்கோலங்களை மீளக் கட்டியெழுப்புவதற்கு உரிமை உடையவர்கள் என்பதை வலியுறுத்துகின்றது. இதில் உளசமூகஅம்சங்களை உள்ளடக்கிய முழுமையான புனர்வாழ்வு என்பது இன்றியமையாத ஒருபொறிமுறையாக அமையும். ஐ.நா, பாதிக்கப்பட்டோருக்கு பரிகாரமாகவும் பதிலீட்டு உரிமையாகவும் இழந்தவற்றை மீளவழங்குதல், நட்டஈடு கொடுத்தல், மீளக் குடியேற்றல், திருப்தியைஉருவாக்குதல், நடந்தவைபோன்ற கொடூரமான சம்பவங்கள் மீண்டும் நிகழாது என நிச்சயமான உறுதியை அளித்தல் என்ற ஐந்து கொள்கைகளை வகுத்துள்ளது. இவற்றைத் தனிமனித, குடும்ப, சமூகமட்டங்களில் செயற்படுத்துவது சிறந்த பயனைத் தரும்.

உலகளாவியரீதியில் மனித உரிமைகளை ஏற்றுக் கொள்வதில் கணிக்கத்தக்க அளவு முன்னேற்றங்கள் நிகழ்ந்துள்ளன, குறிப்பாக ஆரோக்கியமாக வாழ்வதற்கான உரிமைச்சட்டத்திலும், மனிதாபிமானச் சட்டத்திலும், குற்றவியல் சட்டத்திலும் இவை தொடர்பான உடன்படிக்கைகள் இலங்கை உட்படப் பெரும்பாலான நாடுகளரல் ஏற்றுக் கொள்ளப்பட்டுக் கையெழுத்திடப்பட்டுள்ளதுடன் இவை அந்நாடுகளின் உள்நாட்டுச் சட்டங்களிலும் இடம் பெற்றுள்ளன.

மனிதஉரிமைகளை ஸ்திரமாக நிறுவிய பின், அவற்றை மீறும் போது ஏற்படும் விளைவுகளை விளங்கி, அங்கீகரித்து, அதற்கான பதிலீடுகளை, பரிகாரங்களைச் செய்ய வேண்டிய பொறுப்பையும் ஏற்றுக்கொள்ள வேண்டும். அம்மீறலால் ஏற்படும் பாரதூரமான விளைவுகளுக்கு பதிலீடு கேட்கும் உரிமைமக்களுக்கு உண்டு என்பதை அனைத்துலக குற்றவியல் நீதிமன்றத்தின் உரோமாபுரிச் சட்டம்,குறிப்பாக, 75ம் 76ம் சரத்துக்களில் [The Rome Stature of the International Criminal Court (ICC) notably Articles 75 and 79 (ICC 1998)] 1998] வலியுறுத்தியுள்ளது. மனித உரிமைகளை மீறியவர் யாராக இருப்பினும் பாதிக்கப்பட்டவர்களுக்குப் பதிலீடு வழங்குவது அந்நாட்டிலுள்ள அரசமைப்பின் பொறுப்பு என்றகருத்து நிலைபடிப்படியாக வலுப்பெற்று வருகின்றது.

புனர்வாழ்வு பெறுவதற்கானஉரிமை, சிறுவர்உரிமை உடன்படிக்கையிலும்,சமூக, பொருளாதார, பண்பாட்டு உரிமைகள் உடன்படிக்கையிலும், மாற்று வலுவுடையோர் உரிமைகள் உடன்படிக்கையிலும், சித்திரவதை செய்தல், குரூரமான, மனிதாபிமானம் அற்ற முறையில் தரக்குறைவாக நடத்துதலும் தண்டித்தலும் என்பவற்றுக்கு எதிரான் உடன்படிக்கையிலும் விசேடமாகக் குறிப்பிடப் பட்டுள்ளது. கொடூரசித்திரவதைக்கு எதிரான அமைப்பின் மூன்றாவது சரத்தானது பாதிக்கப்பட்டவர்களுக்குப் பதிலீடு கொடுக்கும் பொறுப்பும் கடமையும் நாட்டுக்குரிய அரசமைப்பைச் சார்ந்ததென்றும், அதே நேரத்தில் பதிலீட்டைக் கேட்டுப் பெறுவதற்குப் பாதிக்கப்பட்டவர்கள் உரித்துடையவர்கள் என்றும் இதன் மூலம் நியாயமானதும், கணிசமானதுமான, நட்டஈட்டை, உள சமூக அம்சங்களை உள்ளடக்கிய முழுமையான புனர்வாழ்வை மக்கள் பெறமுடியும் என்றும் குறிப்பிடுகின்றது. ஆயினும் இவற்றை நடைமுறைப்படுத்துதல் என்பது பெரிய சவாலாக உள்ளது. வளம் குறைந்த நாடுகளில், உள சமூக அம்சங்களை உள்ளடக்கிய முழுமையான புனர்வாழ்வுச் செயற்பாட்டைச் சமூகமட்ட அணுகுமுறையினூடாக நடைமுறைப்படுதுவதன் மூலம் இதனைச் சாத்தியப்படுத்திக் கொள்ளலாம்.

இலங்கையைப் பொறுத்தவரையில் பாதிக்கப்பட்டோரின் துயர்துடைக்கும்முயற்சியில் செலவுகுறைந்த, அதிக பயனுள்ள சிகிச்சையாகச் சமூகம்சார் அணுகுமுறையே பொருத்தமானதாக அமையும். போருக்குப்பின்னர் காணப்படும் பரந்த சமூக அளவிலான கூட்டு மனவடுவும் அரசின் நீதிசார், நிதிசார்தடைகளும் இவ்வாறான சமூக அணுகு முறையைக் கைக்கொள்வதனையே வேண்டி நிற்கின்றன.

கடுமையான மனித உரிமை மீறல்களால் பாதிக்கப்பட்டவர்கள், தகுதியான பதிலீட்டைப்பெறாத பட்சத்தில், கௌரவத்தை இழத்தல்,சமூகத்தில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுதல், குற்றம் உள்ளோர் என நினைத்துத்தாமே ஒதுங்கிக் கொள்ளுதல் முதலியவற்றால் தொடர்ந்து பாதிப்புறுவர். இத்தகையவர்களுக்குத் தொடர்ந்து சமூகத்தில் பிறருடன் சமமாகப் பங்குபற்றுவதற்கான சந்தர்ப்பங்கள் அளிக்கப்படவேண்டும். உளசமூக அம்சங்களை உள்ளடக்கிய முழுமையான புனர்வாழ்வு ஒரு காத்திரமான உரிமை என வற்புறுத்துகிறார் ஸ்வீயாஸ் (Sveaass-2013).

நன்றி - குளோபல் தமிழ்ச் செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை யார் கையில்!

...நாட்டு நடப்பு...

மூதூர் தொகுதி ஒரு பின்தங்கிய தொகுதியாக இருந்தாலும் பல சவால்கள் மத்தியில் முன்னேறிய பலரை அங்கு குறிப்பிட்டுக் கூறலாம். அங்கு விவசாயத்தை நம்பி பலர் வாழ்ந்தாலும் தத்தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை திட்டமிட்டு பிள்ளைகளுக்கு நல்வழி காட்டியதால் பலர் இன்று கௌரவமிக்க உயர் தொழில்களில் முக்கிய பதவிகளை வகிக்கின்றனர்.

அவர் மலேரியா தடுப்பு திணைக்களத்தின் மூதூர் பிராந்திய அலுவலகத்தில் கடமையாற்றி அங்கேயே ஓய்வு பெற்று ஓரிரு வருடங்களுக்குள் இறைவனடி சேர்ந்துவிட்டார். அவரது ஓய்வூதியத்தைக் கொண்டு எப்படியோ அவர் மனைவி தனது நான்கு பிள்ளைகளையும் பெரியவர்களாக வளர்த்தெடுத்துக் கொண்டார்.

எல்லா குடும்பங்களிலும் வயது வரிசைப்படியே திருமணங்கள் இடம்பெறுவது வழமை. ஆனால் அந்தக் குடும்பத்தில் இளையவர்கள் எல்லோரும் திருமணம் செய்து கொண்டனர். ஆனால் மூத்தவள் மட்டும் அங்கு தனித்துக் கொண்டாள். அவளிடம் எந்த வித குறையுமே இல்லை. மேலும் இறைவன் அவளுக்கு வழங்க வேண்டியவைகள் அனைத்தையும் வழங்கியிருந்தார்.

ஆனால் அவளின் திருமண விடயத்தில் மாத்திரம் அவர் ஒரு தலைப்பட்சமாக நடந்து அவளின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் ஆளானார். அதை இறைவன் தெரிந்து செய்தாரோ தெரியாமல் செய்தாரோ தெரியவில்லை. இருந்தாலும் இறைவன் தனது படைப்பில் அவளின் திருமண விடயத்தில் மாத்திரம் ஏதோ ஒரு குறையை வைத்துள்ளார் என்பதை மட்டும் தெளிவாக கூறமுடியும்.

அந்தக் குடும்பத்தில் அவளின் அனைத்து இளைய சகோதரிகளும் திருமண பந்தத்தில் நேரகாலத்துடன் இணைந்து குழந்தை குட்டிகளுடன் வாழும் போது மூத்தவளைப் பற்றி பேசுவதை ஊரார் விட்டு வைப்பார்களா? அவள் தான் ஒன்று தன் தொழில் ஒன்று என சிவனே என்று காலத்தை நிம்மதியாக கழிக்கும் போது 'சும்மா கிடந்த சங்கை யாரோ ஊதிக் கெடுத்தார்கள்' என்பது போன்று அவளை குழப்பி விடுவதே அங்குள்ள ஊராரின் வேலையாகும்.



அவள் எதையும் பொருட்படுத்தாமல் நடந்தால் கூட விட்டு வைக்கமாட்டார்கள். அவள் காதில் விழும்படி ஏதாவதொன்றைபேசி அவளை வம்புக்கு இழுப்பார்கள். சிறு வயது தொடக்கம் அவள் படிப்பில் மிக கெட்டிக்காரி. மேலும் படித்து பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று அரசாங்க தொழில் புரிய வேண்டுமென்ற வெறி அவள் மனதில் ஆரம்பத்திலே இருந்து வந்தது. அதை அவள் சாதித்து விட்டாள்.

சாதிப்பதில் பெண்கள் மிகவும் கெட்டிக்காரர்கள் என்று பெரியவர்கள் தெரியாமலா சொல்லி வைத்திருக்கிறார்கள். அவள் உண்மையில் சாதிக்க பிறந்தவள் என்று தான் கூற வேண்டும். ஏனென்றால் இன்று அவள் ஒரு சிறப்பு பட்டதாரி, தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் பல விசேட தரங்களில் சித்திபெற்று அங்கு சாதனைகளை புரிந்தவள்.

சிலர் பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்றாலும் உரிய உத்தியோகம் பெறுவதற்கு பல வருடங்கள் காத்துக் கொண்டிருக்க வேண்டும். ஆனால் பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறி ஓரிரு மாதங்களுக்குள் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தில் அவளுக்கு திட்டமிடல் உதவியாளர் பதவி கிடைத்தது.

இன்றைய அரசாங்கம் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் படித்த பட்டதாரிகளுக்கு தகுந்த வேலை வாய்ப்பை வழங்குவோம் என சூளுரைத்ததின் படி ஆட்சிக்கு வந்த முதல் கட்டத்திலே 42 ஆயிரம் பட்டதாரிகளுக்கு இன மத பேத மின்றி தொழில் வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தது. அரசின் அந்தப் பட்டியலினூடாக அவளுக்கும் பதவியொன்றினைப் பெற சந்தர்ப்பம் கிடைத்தது.



என்றுமே புதிதாக யாதும் தொழிலுக்கு தெரிவு செய்யப்படுபவர்கள் எதையும் தெரிந்து பதவிக்கு வருவதில்லை. வந்த பின்பு தான் அங்குள்ள சிரேஷ்ட உத்தியோகத்தர்களிடம் இருந்து வேலைகளை கற்றுக் கொள்வார்கள். புதிதாக வந்தவர்களால் பழையவர்களுக்கு பெரும் தலைவலி தான் சிலருக்கு ஒரு தடவை சொல்லிக் கொடுத்தால் வேலையை கச்சிதமாக செய்து முடிப்பார்கள். ஆனால் எல்லோரும் அப்படிப்பட்டவர்களல்ல. சிலருக்கு எப்படித்தான் கற்றுக் கொடுத்தாலும் 'டியுப் பல்ப்' போன்று செயல்படுவார்கள், அத்துடன் ஏனோ தானோ என்றும் நடந்து கொள்வார்கள்.

மேலும் தொழில்நுட்பங்களை எவ்வளவுதான் சொல்லிக் கொடுத்தாலும் கிரகிக்கும் தன்மை குறைந்தவர்கள் தங்களது மூத்த ஊழியர்களின் ஏச்சுக்கும் பேச்சுக்கும் உள்ளாகும் சம்பவங்கள் பல. புதியவர்களின் தொல்லை பொறுக்க முடியாத சில மூத்த ஊழியர்கள் 'இந்த அரசாங்கம் 42 ஆயிரம் குப்பைகளை அலுவலகம் எங்கும் கொட்டிவைத்துள்ளது' என கிண்டலாக பேசுவார்கள்.

ஆனால் அவள் இந்த அலுவலகத்திற்கு புதியவளாக இருந்தாலும், அங்குள்ள ஊழியர்கள் அவள் மேல் அன்பாக இருந்து சகல வேலைகளையும் முறையாக சொல்லிக் கொடுக்கத் தவறவில்லை. அவளும் மிக பணிவுடன் மூத்த ஊழியர்களை மதித்து அவர்களின் அறிவுரைகள், ஆலோசனைகள் ஆகியவற்றை கேட்டு நடந்து வந்ததால் குறகிய காலத்தினுள் திணைக்கள தலைவர்கள் உள்ளிட்ட அனைத்து ஊழியர்களிடமிருந்தும் பாராட்டை பெற்றுக் கொண்டாள்.

அங்கு அரசினால் புதிதாக நியமிக்கப்பட்ட பல பட்டதாரிகள் தங்கள் வேதனத்தை மட்டும் நம்பி அலுவலகம் சென்றார்களே தவிர வேலைகளை கற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை. ஆனால் அவள் தனக்கு தரப்பட்ட கடமைகளில் மிக கவனமாக செயல்பட்டதால் தனது எதிர்காலத்தை பற்றி காலா காலத்திற்கு சிந்திக்க தவறியதும் அவளின் திருமண விடயம் நீண்ட காலம் தள்ளிப் போய்க் கொண்டிருப்பதற்கு காரணமாகும்.

தற்காலத்தில் திருமணமாகாத இளம் பெண்கள் விதவைகள், விவாகரத்து செய்யப்பட்ட பெண்கள் தனியாக வாழமுடியாத நிலை உருவாகியுள்ளது. இளைஞர்கள் தொடக்கம் முதியோர் வரை பெரும்பாலும் அப்படிப்பட்டவர்களை பார்க்கும் போது தவறான கோணத்திலிருந்தே தங்கள் பார்வை செலுத்துவதால் பல யுவதிகள் எவரையும் நம்பத் தயாராக இல்லை. ஒரு நாள் மட்டும் பழகினால் போதும் சிலர் முக நூலுக்குள்ளாலும், கையடக்க தொலைபேசி மூலமும் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்து விடுவார்கள். அவ்விதமான நடவடிக்கைகள் நிமித்தம் பல அப்பாவிப் பெண்கள் தத்தமது வாழ்க்கைகளை தொலைத்த சம்பவங்கள் பல.

எது என்னவாக இருந்தாலும் வெளிநாடுகளில் வாழும் அவளது இளைய சகோதரிகள் அவளை மறந்து விடவில்லை. அன்று அவசரமாக முகநூல் மூலம் பல தகவல்கள் அவளுக்கு அனுப்பப்பட்டிருந்தன. அவளும் அவள் தாயாரும் அவசரமாக இந்தியாவுக்குச் சென்றனர். அங்கே அவளது அனைத்து சகோதரிகளும் தத்தமது குடும்பத்தினருடன் வந்திருந்தனர். ஒட்டு மொத்த குடும்பமும் மங்களகரமான நிகழ்வு ஒன்றுக்காக அங்கு ஒன்று சேர்ந்தனர்.

ஊராரினாலும், நண்பர்களினாலும் அவளுக்கு அடிக்கடி கொடுக்கும் தொந்தரவுகளுக்கு இந்தியாவிலுள்ள இந்தியாவிலுள்ள லக்ஷ்மி திருமண மண்டபத்தில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. ஆம்... அவளுக்கு அன்று திருமணம் நடந்தேறியது. மணமகன் கனடாவைச் சார்ந்தவர். அங்கு கல்லூரி ஒன்றில் அதிபராக கடமையாற்றுகின்றார். 1983ம் ஆண்டு வன்செயல் காரணமாக தாய் நாடான இலங்கையை விட்டு புலம் பெயர்ந்து பெற்றோருடன் சென்று கனடாவில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்ட அவர் ஒரு விஞ்ஞானப் பட்டதாரியும் கூட.



அந்த புதிய மணமக்கள் பொருத்தம் தொடர்பில் சகலருக்கும் பூரண திருப்தியாக இருந்தது. நீண்டகாலமாக அவர்கள் இருவரையும் சேர்த்து வைப்பதற்கு இறைவன் தாமதித்தாலும் மனமகிழ்வுடன் ஒருவரை ஒருவர் ஏற்றுக்கொண்டதே பெரிய விடயம். மணமகன் செல்வாக்கு மிக்கவராக இருந்தமையால் கனடாவில் நிரந்தர வதிவிடத்தை தனது மனைவிக்கும் மாமியாருக்கும் குறுகிய காலத்தினுள் பெற்றுக் கொடுத்து அவர்களை தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

'யார் என்ன கூறினாலும் நீ எதையும் பொருட்படுத்தாதே. திருமண வயதில் இருப்பவர்களுக்கு திருமணம் நடக்காவிட்டால் ஊரார், உறவினர் பலதையும் கதைப்பது வழமை, அதை புரிந்து கொள்ளாமல் வார்த்தைகளை நாமே தவறவிட்டால் பலரின் நட்புக்களை தவறவிட நேரிடும்' என அடிக்கடி அவளின் நண்பி ஒருவர் கூறிய அறிவுரைகள் இன்னும் அவள் காதில் ஒலித்துக் கொண்டே இருக்கின்றன.

இலங்கையில் சாதாரண தொழிலொன்றை பெறுவது மிக கஷ்டம். அதுவும் அவள் பட்டதாரியாக கௌரவமான உத்தியோகம் ஒன்றை முற்று முழுதாக கைவிட்டுச் சென்றது கவலைக்குரியதே. இருப்பினும் தனது பிறந்த வீட்டை விட புகுந்த வீட்டுக்கு மதிப்பளிக்க வேண்டுமல்லவா? இறைவன் மிகவும் புதுமையும் வல்லமையும் மிக்கவர். யார் யாருக்கு எங்கெங்கே துணையை தேடிக் கொடுக்கவேண்டும் எனும் பொறுப்பை அவர் ஏற்றிருப்பதால் நாம் ஏன் கவலை கொள்ள வேண்டும். கோரிக்கையும், பிரார்த்தனையும் எமது கையில், தீர்வு இறைவனின் கையில்.

- பாலையூற்றான் -

## முதலையுடன் பெண் மோதல்

ரஷ்யாவில் சர்க்கஸ் நடத்தி வரும் ஒரு குழுவினர், சர்க்கஸ் பேருந்தில் முதலை ஒன்றை எடுத்து சென்றனர். அந்த பேருந்தில் சர்க்கஸில் பணிபுரியும் ஊழியர்களும் சென்றனர். திடீரென சாலையில் டிரைவரின் கட்டுப்பாட்டை இழந்து பேருந்து சாலையின் ஓரத்தில் இருந்த சுவரில் மோதியது.


இந்த விபத்தில் பேருந்தின் உள்ளே உட்கார்ந்திருந்த 114 கிலோ எடையுள்ள ஒரு குண்டுப்பெண் சீட் பெல்ட் அணியாததால் தூக்கி வீசப்பட்டார். அவர் தூங்கிக்கொண்டிருந்த முதலையின் மீது வீழ்ந்ததால் முதலைக்கு படுகாயம் ஏற்பட்டது. தொடர்ந்து மூன்று மணிநேரமாக முதலைக்கு வாந்தி ஏற்பட்டதால் உயிருக்கு ஆபத்தான நிலையில் விலங்குகள் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளது. முதலையின் உள் பகுதியில் பலத்த காயம் ஏற்பட்டுள்ளதாகவும் குண்டு பெண்ணுக்கு சிறிய காயமே ஏற்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.



## ஃபேஸ்புகினால் வந்த வினை

இங்கிலாந்து நாட்டை சேர்ந்த George Nicholls என்பவர் தன்னுடைய ஷாப்பிங் காம்ப்ளக்ஸுக்கு பெயிண்ட் அடிப்பதற்கான ஒப்பந்தததை 25 வயதுள்ள ஒரு பெயிண்டரிடம் கொடுத்திருந்தார். அந்த பெயிண்டர் ஷாப்பிங் காம்ப்ளக்ஸ் முன்பு ஒருவேனை நிறுத்தி அந்த வேன் உடன் இணைக்கப்பட்டிருந்த ஏணியில் ஏறி பெயிண்ட் அடிக்கும் பணியில் ஈடுபட்டிருந்தார்.

பரபரப்பான பிசியான சாலையில் பேருந்து நிறுத்தம் அருகில் எவ்வித பாதுகாப்பும் இன்றி வேன் மீது அவர் பெயிண்ட் அடித்ததற்கு கண்டனம் தெரிவித்தனர். ஆனால் பெயிண்டர் கண்டுகொள்ளாமல் பெயிண்ட் அடித்துக்கொண்டே இருந்தார்.



இந்நிலையில் ஒருவர் பெயிண்டரை புகைப்படம் எடுத்து தனது ∴பேஸ்புக்கில் பதிவு செய்தார். அதை HSE என்ற (Health Survey for England) இன்ஸ்பெக்டர் Frank Flannery என்பவருக்கும் டேக் செய்தார். அடுத்த அரைமணி நேரத்தில் அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். பாதுகாப்பின்றி பெயிண்ட் அடித்த குற்றத்திற்காக அவருக்கு $4000 அபராதம் விதிக்கப்பட்டதுடன் அவர் பயன்படுத்தி வந்த வேனும் பறிமுதல் செய்யப்பட்டது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# அங்கீகாரம்

சிறுகதை

பிரபாகரன் சங்கடமாக உணர்ந்தான். அறை வாசலை "உள்நோக்கத்துடன் தான்" திறந்து வைத்திருந்தான். ஓர் இணை இயக்குநர் படத்தின் நாயகிக்கு வசனமும், காட்சியின் அழுத்தமும் சொல்லிக்கொடுப்பது வழக்கம். என்றாலும், வெளியிடம் ஒன்றுக்கு வந்த இடத்தில் இரவு நேரத்தில் தங்கியிருக்கும் லாட்ஜின் கதவை தாழ்ப்பாள் போட்டுவிட்டு டயலாக் சொல்லிக் கொடுப்பது யூகத்திற்கு வழிவகுக்கும் என்பதை உணர்ந்திருந்தான். அதனால்தான் கதவை திறந்து வைத்தான். ஆனால் அதற்கு அர்த்தம் இல்லாதது போலிருந்தது நாயகி ராகினியின் பார்வை.

அவனைத்தின்று விடுவது போல பார்த்தாள். கண்களில் கள்ளம். கையில் இருந்த பேப்பரை கீழே வைத்துவிட்டு அவளை முறைத்தான் பிரபாகரன். இது கோபப்படும் தருணம் அல்ல. நிதானமாகப் பேசினான்.

'ராகினி நாளைக்கு க்ளைமாக்ஸ். நாலு பக்க டயலாக் பேசணும். அதப்பத்தி நீ அலட்டிக்கிட்ட மாதிரி எனக்குத் தோணல. ஷூட்டிங்ல சொதப்பின டைரக்டர் என்னை தொலைச்சிடுவார். ப்ளீஸ் இங்க கவனம் வை" என்றான் கெஞ்சலாக.

படப்பிடிப்புத் தொடங்கிய இந்த ஆறு மாதங்களில் ராகினிக்குத் தன்மீது ஈர்ப்பு ஏற்பட்டு இருப்பதையும் அதை அவள் சந்தர்ப்பம் கிடைக்கும் தருணங்களில் எல்லாம் வெளிப்படுத்திக் கொண்டிருப்பதையும் உணர்ந்தே இருந்தான். ஆனால் அதை அவனால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. அது குறித்து அவன் சிந்தித்தது கூட இல்லை.

நடிகையைக் காதலித்து கைப்பிடிப்பதல்ல அவன் இலட்சியம். சாதிக்கும் எண்ணம் இருந்தது. சினிமா குறித்தான ஒரு பார்வையும், திரைப்படம் குறித்தான வித்தியாசமான ஒரு கோணமும் இருந்தது. அதன் காரணமாகத்தான் ராகினியின் எண்ணங்களுக்கு இடம் கொடுக்காமல் விலகி இருந்தான். இன்னும் இரண்டு நாள் படிப்பிடிப்பு முடியப் போகிறது. அதற்குள் ராகினி அசட்டுத்தனமாக ஏதாவது அவனிடம் தன்னை வெளிப்படுத்துவாள் என்பதை எதிர் பார்த்திருந்தான்.

அதற்கான தனிமை சூழ்நிலைதான் இன்றைய தினம் என்பதை உள்ளுணர்வு உணர்த்திற்று.

'எப்ப என்னை புரிஞ்சுக்கப் போறீங்க பிரபாகர்?' கேட்டே விட்டாள்.

"நான் எதுக்கு உன்னைப் புரிஞ்சுக்கணும்?"ஏதும் புரியாதவன் போல கேட்டான்.

ராகினி சிரித்தாள். அந்தச் சிரிப்பு அவன் வயதை ஏதோ பண்ணிற்று. அற்புதமான சிரிப்பு. ஓர் இணை இயக்குநராக ஒரு படைப்பாளியாக ராகினியை அவனால் புறக்கணிக்க முடியாது. அப்படி ஓர் அழகி. அதற்கு இணையாக நடிப்பு.



மாத்தளையில் இருந்து புகைப்படம் வந்தபோதும் பிற்பாடு இயக்குநரோடு நேரடியாகப் பார்த்தபோதும் மனதுக்குள் இருந்த நம்பிக்கையை முதல் நாள் படப்பிடிப்பிலேயே சிதறடித்தாள். முகத்தின் ஒவ்வொரு அங்குலமும் நடிப்பை வெளிப்படுத்திற்று. காலங்காலமாக நடிப்பவள் போன்ற உணர்வை அவளின் உடல்மொழி தெரியப்படுத்திற்று.

"என்ன சிரிப்பு?"

"நம்ம உறவு, சினிமா மாதிரியே இருக்கு பிரபா"

"என்ன உறவு?"

"தெரியாத மாதிரி கேட்காதீங்க. புரியலையா? இன்னைக்கு ஒரு முடிவு தெரியணும் பிரபா... இல்லேன்னா நாளைக்கு ஷூட்டிங் வர மாட்டேன்..."

தழுதழுத்த குரலில் பேசினாள்.

வார்த்தை தொண்டைக்குழியில் சிக்கிற்று.

எதிர்பார்த்ததைவிட, அதிகமாக காதல் அவளைப் படுத்துவதை பிரபாகர் உணர்ந்தான். பக்குவமற்ற வயது. தன்னை உணராத நிலை. இந்தப் படத்திற்குப் பிறகு அவளுக்கான பிரம்மாண்ட இடத்தை அவளால் இன்னும் புரிந்து கொள்ள முடியவில்லை. அதனால்தான் இணை இயக்குநர் மீது காதல். இப்போது இவளைச் சமாளிக்க வேண்டும். ஏதும் சர்ச்சை எழுந்திடாத வண்ணம் நடந்துகொள்ள வேண்டும். இயக்குநரிடம் இருக்கும் நல்ல பெயரைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். படப்பிடிப்பை

வெற்றிகரமாக முடிக்க வேண்டும். பிரபாகரனின் மனதுக்குள் எண்ணங்கள் ஓடிற்று. சட்டென அந்த ஐடியா வந்தது.

"ராகினி"

"ம்"

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

தலையணையை நகர்த்தி வைத்துவிட்டு அவன் முகம் பார்த்தாள்.

"உன்னோட எண்ணம் எனக்குப் புரியுது. இதுல அவசரப்பட்டு ஏதும் முடிவெடுக்க முடியாது. நிறைய யோசிக்கணும். நமக்குள்ள ஒரு சின்ன அக்ரிமெண்ட்..."



"சொல்லுங்க பிரபா..."

"படப்பிடிப்பு நாளைக்கு முடியுது. ரெண்டு மாசத்துல படம் ரீலிஸ். படம் நிச்சயம் ஹிட். வெற்றி செய்தி காதுக்கு வந்த அடுத்த நிமிடம் நீ என்னைத் தேடி வர்ற. இல்லேன்னா நான் உன்னைத் தேடி வர்றேன்... ஓகே...? நாம கல்யாணம் பண்ணிக்கிறத பத்தி முடிவு பண்ணலாம்.

அதுவரைக்கும் அமைதியா இருப்போம். அதான் ரெண்டு பேருக்கும் நல்லது. ஓகே?"

அவனையே உற்றுப் பார்த்தவள் இதுவரை இப்படி ஏதும் ஆசை வார்த்தைகளை அவன் உதடு உச்சரிக்காததால், அவன் முற்றிலும் எதிர்பார்க்காத விநாடியில் பச்சென கன்னத்தில் முத்தமிட்டாள்.

"இப்ப டயலாக் பார்க்கலாம்" என்றாள் உற்சாகமாக.

பிரபாகர் எதிர்பார்த்தது நடந்தது. படத்திற்கு மிகப்பெரிய ஓபனிங் இருந்தது. இரண்டாவது படத்திலும் ஹிட். படம் வெளியான பிறகு நிச்சயம் தேடி வருவாள் என்பதை உணர்ந்திருந்தவன், தங்கியிருந்த அறையை மாற்றினான். அலைபேசி நம்பரையும் மாற்றினான்.

நான்கு படங்களுக்குக் கையில் அட்வான்ஸுடன் தயாரிப்பாளர்கள் அலைந்தபோதும், ராகினி அதைப் பொருட்படுத்தாமல் பிரபாகரைத் தேடினாள். அவன் தங்கியிருந்த அறையைக் கண்டுபிடித்து வந்தபோது அது பூட்டப்பட்டிருப்பதையும், பிரபாகர் அறை மாறி விட்டதயும் அதோடு அலைபேசி நம்பரை மாற்றி விட்டதையும் அறிந்தவள் தனிமையில் அழுதாள். இவ்வாறே ஒரு வருடம் நகர்ந்தது.

உதவியாளன் வேகமாக உள்ளே வந்தான். பிரபாகர் அவன் வேகத்தை உணர்ந்து முகத்தைப் பார்த்தான்.

'ஸார்... ராகினி உங்களைத் தேடி வந்திருக்காங்க...'

பிரபாகருக்குச் சிறிது அதிர்ச்சி. ஆனாலும் சமாளித்துக் கொண்டான். 'வாசல்ல வெயிட் பண்றாங்க... அவங்க உங்களத் தேடி வந்திருக்கிற தகவல் போயி புரொடியூஸர் வந்துகொண்டு இருக்காரு சார்..."

'வரச்சொல்லு... நீங்கள்லாம் கொஞ்சம் வெளில இருங்க'

உதவியாளர்கள் வெளியேறிய உடன் ராகினி உள்ளே வந்தாள்.

'ஹாய்' என்றான். அவனையே உற்றுப் பார்த்தாள்.

'கண்டுபிடிச்சி வந்திட்டேன் பார்த்தியா? நீ எங்கே போனாலும் விடமாட்டேன்'.

'ஓ.கே. ஆல் த பெஸ்ட். தமிழ், சிங்களமென்று கலக்கிட்டு இருக்கே'.

'ஆனா நிம்மதி இல்ல.'

'நீதான் அமைச்சுக்கணும்.'

'எனக்கு நீ வேணும்' 'விளையாடாதே. இன்னும் நாலு வருஷத்துக்குக் கையில படம் இருக்கு. இப்பப் போயி காதல் கீதல்ன்னு மனச குழப்பிக்காத, எனக்குப் பணம் முக்கியமில்ல. மனசுக்குப் பிடிச்சவரோட வாழணும்'

'ஒரு வருஷமாச்சு. நீ இன்னும் மனசை மாத்திக்கலையா?

'எத்தினி வருஷமானாலும் மாத்திக்க மாட்டேன். நைசா பேசி என்னை ஏமாத்திட்டதா நினைப்பா? பைத்தியமா உனக்கு? சொல்லு யாரு வேணும் உனக்கு? எந்த ஹீரோ வேணும் உனக்கு? எந்தப் புரொட்யூஸர்கிட்ட பேசணும்? அடுத்த வெள்ளிக்கிழமை பூஜை. நான் ஏற்பாடு பண்றேன்.

படபடத்தாள். பிரபாகரன் சிரித்தான்.

'நான் வெளிப்படையா உண்மைய சொல்லிடறேன் ராகினி. மனசுக்குள்ள ஆசையையும் எதிர்பார்ப்பையும் உண்டாக்கி வச்சிருக்கு... இனியும் மறைச்சா நல்லா இருக்காது.

எனக்கு கல்யாணம் நிச்சயமாயிட்டு. முறைப்பொண்ணு. அடுத்த மாசம் ஆறாம் தேதி சிம்பிளா மண்டபத்தில கல்யாணம். நாளைக்குப் பத்திரிகை அடிச்சு வருது. முதல் பத்திரிகை உனக்குதான்.'

ராகினியின் முகம் பேயறைந்தது போலாகியது. கண்களில் கண்ணீர் பொங்கிற்று. பிரபாகருக்குப் பாவமாக இருந்தது.

கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவனை ஒருமுறை ஆழமாகப் பார்த்துவிட்டு அறையை விட்டு வெளியேறினாள்.

சில விநாடிகளில் வாசலில் இருந்து கார் வேகமாகப் புறப்படும் சத்தம் கேட்டது.

உள்ளே வந்த இணை இயக்குநர் மூர்த்தி, சார் நான் ஓரளவு கேள்விப்பட்டு இருக்கேன். உங்களுக்குப் படம் கிடைச்சிட்டு. அவங்களும் நம்பர் ஒன் ஆர்டிஸ்ட். எனக்கு தெரிஞ்சு உங்களுக்கு அ.்.பையர் ஏதும் கிடையாது. அப்புறமென்ன? ராகினிய கல்யாணம் பண்ணிக்க வேண்டியதுதானே? நடிகைங்கற தயக்கமா?"

இணை இயக்குநர் என்றாலும் பிரபாகர் நட்பு ரீதியாக அவனுடன் எண்ணவோட்டங்களைப் பகிர்ந்து கொள்ளும் உரிமையில் பேசுகிறான்.

பிரபாகர் மூர்த்தியைப் பார்த்து சிரித்தான்.

"பதினஞ்சு வருஷமாச்சு மூர்த்தி. அஸிஸ்டெண்ட் டைரக்டரா ஆவறதுக்காக நான் அலைஞ்சது மறக்காது மூர்த்தி. அஸிஸ்டென்ட் டைரக்டரா பத்து வருஷத்துல எட்டுப் படம் முடிச்சிருக்கேன். முறையா வளர்ந்திருக்கேன். எங்கேயும் குறுக்கு வழி இல்ல.

எங்க டைரக்டரை விட்டு வெளிய வந்த இந்த ஒரு வருஷத்துல நான் கதை சொல்லாத தயாரிப்பாளர் கிடையாது. நடிகர் கிடையாது. இந்தக் கதைக்கு இப்பதான் மரியாதை கிடைச்சிருக்கு. என் உழைப்புக்கான, அலைச்சலுக்கான, முயற்சிக்கான அங்கீகாரம் எனக்கு வேணும் மூர்த்தி..." 'ராகினி மேல எனக்கு சா.்.ப்ட் கார்னர் இருக்கு. இல்ல... அது வேற. ஆனா இன்னைக்கு நான் அவள கல்யாணம் பண்ணிக்கிட்டா என் உழைப்பு அடிபட்டுப் போயிடும். ஒரு நடிகையோட புருஷனா ரொம்ப சாதாரணமானவனா ஆயிடுவேன். என்னோட தனித்தன்மையை இழந்திடுவேன். இந்த வாய்ப்பு அவ வாங்கிக் கொடுத்ததுன்னு பேசிடுவாங்க. பத்து வருஷ முயற்சி அந்த ஒரு வார்த்தைல அடிபட்டுப் போயிடும் மூர்த்தி. ஒரு வெற்றி இயக்குநரா என்னை முன்னிலைப் படுத்திக்கணும். குற்ற உணர்ச்சியோட நிக்கக்கூடாது."

மூர்த்தி வியப்பாக அவனைப் பார்த்தான்.

இந்தப் படம் ஹிட் ஆகி, ஒரு வெற்றி இயக்குநரா எனக்கு அங்கீகாரம் கிடைக்கலாம். என்னை நான் நிரூபிக்கலாம். அப்ப நான் ராகினிய தேடிக்கூட போகலாம். நாங்க கல்யாணம் கூட பண்ணிக்கலாம். ஆனா அதுக்கான சந்தர்ப்பம் இப்ப இல்ல. எந்த சூழ்நிலையிலும் என்னோட உழைப்ப, முயற்சிய நான் விட்டுக்கொடுக்கறதா இல்ல மூர்த்தி" என்ற படி சிரித்தான்.

நல்ல கிரியேட்டர், இயக்குநர் என்றெல்லாம் பிரபாகரைப் பற்றி இமேஜ் வைத்திருந்த மூர்த்திக்குப் பிரபாகரனின் நேர்மை ரொம்பவே பிடித்திருந்தது.



"ஆல் த பெஸ்ட் சார்" என்றான் சிரிப்புடன், சிலிர்ப்புடன்.

அவளது காதல் உண்மையானதாக இருந்தால் என்றாவது ஒரு நாள் அவன் அவளைத் தேடிச் செல்வான்.

நன்றி - தினமணி கதிர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## "நீங்களும் எழுதலாம்"

### கவிதைப் போட்டியின் முடிவுகள்

பாடசாலை மாணவர்களின் கவிதை ஆக்கத்திறனை வளர்க்கும் நோக்கில் நீங்களும் எழுதலாம் கவிதைச் சஞ்சிகையின் வாசகர் வட்டம் அண்மையில் போட்டி ஒன்றினை திருகோணமலை மாவட்டத்தில் நடத்தியது.

அதன் முடிவுகள் பின்வருமாறு: முதலாம் இடம் : கு.இந்துஜன் - புனித சூசையப்பர் கல்லூரி, இரண்டாம் இடம் : மு.சதீஸ் - ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி. மூன்றாமிடம் : மு.மதுரண்யா - ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி மற்றும் மு.இ. பாத்திமா நுஹா - கிண்ணியா முஸ்லீம் மகளிர் கலாரி

பாராட்டுப் பரிசில் பெறும் ஏனைய மாணவர்கள்

எம். பிரஷாந்தினி - நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி, து. அனோஜினி - மெதடிஸ்த மகளிர் கல்லூரி, வ.தமிழ்ச்செல்வன் - புனித சூசையப்பர் கல்லூரி, வை.கிருஸ்ணவேணி - நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி, இ.மனோஜா - புனித மரியாள் கல்லூரி, மு.சிவரஞ்சிதா - கலைமகள் வித்தியாலயம், மு.ஸஹானா - அல் பதாஹ் மகா வித்தியாலயம், சு.கிருஷாலினி சாம்பல்தீவு தமிழ் மகா வித்தியாலயம், ஜே.எப்.சாஜிதா - ஸாஹிரா கல்லூரி, ச.சாருஜா - மெதடிஸ்த மகளிர் கல்லூரி, தே.கோபிகா - ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, த.கௌரிலக்ஷ்மி - கோணலிங்க மகா வித்தியாலயம், த.சூரியகலா - புனித மரியாள் கல்லூரி, ந.நவலோஜனன் - ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, வை.றேச்சல் நிலக்ஷனா - நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி, ஸ்ரீ.அபிஷாலினி - மெதடிஸ்த மகளிர் கல்லூரி, எஸ்.ஹம்சத்வனி - உவர்மலை விவேகானந்தா கல்லூரி, வி.ஜனுசன் - உவர்மலை விவேகானந்தா கல்லூரி, க.சப்னா பேகம் - அல் பதாஹ் மகா வித்தியாலயம், யோ.சுரேஸ்குமார் - நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி, ந.துலக்ஷநாத் - ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி, கே.ஜனார்த்தனன் - உவர்மலை விவேகானந்தா கல்லூரி, ரி.தனுஷன் - உவர்மலை விவேகானந்தா கல்லூரி.

பரிசளிப்பு நிகழ்வு இடம்பெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும் என நீங்களும் எழுதலாம் வாசர் வட்டம் மற்றும் நீங்குளும் எழுதலாம் கவிதையிதழின் ஆசிரியர் திரு. தனபாலசிங்கம் தெரிவித்தார்

# கொலை செய்யப்பட்ட கவிதை
# செல்வி. டிமாசா கயனகி



இலங்கை, எல்பிடிய பிரதேசத்தைச் சேர்ந்த பல்கலைக்கழக மாணவி செல்வி. டிமாஷா கயனகி, தனது கல்வி நடவடிக்கைகளுக்காக கொழும்பு செல்வதற்காக 24.05.2014 அன்று விடிகாலை 3.30 மணிக்கு, எல்பிடிய பஸ் நிலையத்துக்கு வந்தவேளை, அங்கு நின்றிருந்த இராணுவ வீரனொருவனால் அருகிலிருந்த பாழடைந்த கட்டிடமொன்றுக்கு இழுத்துச் செல்லப்பட்டுள்ளார். மாணவி அங்கிருந்து தப்பிக்க முற்பட்ட வேளையில் இராணுவ வீரனால் கத்தியால் பல தடவை குத்தப்பட்ட நிலையில் மரணமடைந்துள்ளார்.

மோப்பநாயின் உதவி கொண்டு தப்பித்துச் சென்ற குற்றவாளியைக் கைது செய்துள்ள போதிலும், குற்றவாளி இராணுவத்தினன் என்பதால் "இராணுவ வீரனது விருப்பத்துக்கு இணங்க மறுத்ததால் அவனுக்கு ஏற்பட்ட சடுதியான கோபத்தின் காரணமாகவே கொலை நிகழ்ந்துள்ளது. திட்டமிட்டுச் செய்ததல்ல" என இராணுவத்தரப்பும், இலங்கைக் காவல்துறையும் சம்பவத்தை மூடி மறைக்கவும், குற்றவாளியைத் தப்பிக்கச் செய்யவும் முயற்சிக்கிறது.

21 வயதான செல்வி.டிமாஷா கயனகி, இலங்கை, கட்புல ஆற்றுகைக் கலைகள் (University of Visual & Performing Arts) பல்கலைக்கழகத்தின் இரண்டாம் வருட மாணவி. சனி, ஞாயிறு விடுமுறை தினங்களில் கூட கொழும்புக்குச் சென்று, தலவத்துகொட பிரதேசத்திலுள்ள முதலாம் தொடக்கம் ஐந்தாம் வகுப்பு வரையுள்ள ஏழை மாணவ, மாணவிகளுக்கு ஆங்கில மொழியைக் கற்பித்து வந்த, சமூக சேவை மனப்பான்மை கொண்ட இளம் பெண்.

கடந்த- 24.05.2014 அன்று ஒரு இராணுவ வீரனால் படுகொலை செய்யப்பட்ட அவர் மரணிக்க முன்பு இறுதியாக எழுதியிருந்த கவிதை இது.

எப்போதேனுமொரு நாள் இவையெல்லாவற்றையும்
விட்டுச் செல்லவேண்டியிருக்கும்
எவரும் மகிழ்ச்சியாகச் செல்லும் பயணமல்ல அது
எனினும் அதை
துயரமின்றிச் செல்லமுடிந்தால்
எவ்வளவு நன்றாகவிருக்கும்

அந்நாளில்
நினைவில் வராதோர் அனேகர்
எனினும்
நினைவில் வரக் கூடிய சிலரில்
நீங்கள் இருப்பீர்களென்ற நம்பிக்கை எனக்கிருக்கிறது

நான் மரிக்கும் நாளில் வாருங்கள்
என்னைப் பார்க்கவென்றே வந்துசெல்லுங்கள்
ஒருபோதும் சிந்திராத கண்ணீரில்
ஒரு துளியை விட்டுச் செல்லுங்கள்

இரு விழிகளும் இறுக்கமாக மூடப்பட்டிருந்த
போதிலும்
குளிர்ந்த சரீரத்துடனிருந்த போதிலும்
முன்பு பழகியதையெண்ணி
நெற்றியிலொரு முத்தமிடுங்கள்

ஆயிரம் கண்கள் பார்த்திருக்கும்
எனது நற்குணங்களை விமர்சிக்கும்
பதிலாக எதுவும் பேசாது
ஒரு பிடி மண்ணிட்டுச் செல்லுங்கள்

கல்லறையிலிருந்து நீங்கள்
நீங்கிச் செல்கையில்
மாபெரும் தனிமையை நான் உணரக் கூடும் - எனவே
ஒரு பூவை மட்டும் வைத்துவிட்டு
நீங்கள் செல்லுங்கள் திரும்பிப் பாராது

**- டிமாசா கயனகி -**

**நன்றி - ரிசான் ஷெரீவ்**

# கோணேசர் கல்வெட்டு

**பாகம் : 06**

குளக்கோட்டன் அநுராதபுர அரசி ஆன சௌந்தரியுடன் விவாக ஒப்பந்தம் செய்து கொண்டு அரசியின் துணையுடன் இங்கு கட்டிய பெரிய குளத்துக்குத் திருக்குளம் என்ற பெயரே வழக்கில் இருந்து வந்தது.

பிற்காலத்தில் அநுராதபுரத்தில் இருந்து அரசோச்சிய கயவாகு என்னும் மன்னன் சமணனாக மாறி சைவாலயங்களை இடித்தழிக்கும் நோக்கில் படைகளுடன் காட்டு வழியே சதுர் வேதமங்கலத்தை நோக்கி வந்த போது அவனது தீய எண்ணத்துக்கு தண்டனையாக அவன் கண்கள் பார்வை குன்றி குருடாகியது. மன்னனும் படைகளும் ஆறாத்துயரில் ஆழ்ந்து அவ்விடத்திலேயே கூடாரமிட்டு தங்கினார்.

கவலையில் மூழ்கிக் கிடந்த அரசனின் கனவில் ஒரு முதியவர் தோன்றி உன் தீய எண்ணத்துக்கு தகுந்த தண்டனை பெற்றாய் ஆயினும் இறைவனை துதித்து தர்ம சீலனான குளக்கோட்டன் அமைத்த நன்னீர்க் குளத்தில் தீர்த்தமாடினால் உன் துயர் அகலும் என்று கூறி மறைந்தார்.

அப் பெரியாரின் கூற்றுக்கமைய திருக்குளத்தில் நீராடிய போது கண் மீண்டும் ஒளி பெற்றது. கெட்டுப் போன கண் தழைத்த காரணத்தால் திருக்குளம் என்ற வழக்கில் இருந்த பெயர் மறைந்து கண்தழை என்ற காரணப்பெயர் வழங்கலாயிற்று.

அடுத்துள்ள சதுர்வேத மங்கலம் என்ற பெயரும் மறைந்து, கண்தழை என்ற பெயரே ஊருக்கும் குளத்துக்கும் வழங்கப்படலாயிற்று. இப்பெயரே காலப் போக்கில் திரிந்து கந்தளாய் என்று அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது. எடுத்துக் காட்டாக திருக்கோணேஸ்வர புராணம்.

நோக்கு கண் விளங்கக் கண்ட
நுவலரும் கயத்துக்கன்பால்
தேக்கு கண்டழையா மென்னச்
சிறந்ததோர் நாமம் நாட்டிக்
கோக்குல திலகனாய குளக்
கோட்டு மன்னன் செய்த
பாக்கியம் விழுமிதென்னா
வியந்தனன் பரிந்து மன்னா

சான்று பகர்கிறது.

இயற்கை அழகு செய்வதாக குளத்தின் சூழல் காணப்படுகின்றது. இக் குளக்கட்டுக் கருகில் குளக்கோட்டனின் வேண்டுகோளுக்கமையவே, நாராயண மூர்த்தியில் அணைக்கட்டோரம் விநாயகர் ஆலயம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. 1986 இல் கந்தளாய் நீர்த்தேக்கம் அழிக்கப்பட்டாலும் மீண்டும் அவ் ஆலயம் கட்டப்பட்டு குளக்கட்டுப் பிள்ளையார் கோவில் என்று அழைக்கப்படுகின்றது.

கந்தளாய் குளம் பற்றி பெருமகனார் தம்பலகாமம் க.வேலாயுதம் அரிய பல கருத்துக்களை வெளியிட்டுள்ளார். கந்தளாய் நீர்த்தேக்கத்தை அமைத்தவன் இரண்டாம் அக்ரபோதி என்று இலங்கைச் சரித்திரம் கூறுகிறது.ஆனால் இம் மன்னனுக்கு முன் முப்பத்தி மூன்று வருடங்கள் ஆட்சி செய்த முதலாம் அக்ரபோதி மின்னேரியாக் குளத்தைக் கந்தளாயுடன் இணைக்க ஒரு கால்வாயை வெட்டினான் எனச் சரித்திரம் முன்னுக்குப் பின் முரணாகக் குறிப்பிடுகிறது. கந்தளாய்க் குளம் இருந்தபடியால் தானே முதலாம் அக்ரபோதி கால்வாய் வெட்டினான் என்று ஆகிறது. முதலாம் அக்ரபோதி கந்தளாய்க்கு கால்வாய் வெட்டி வந்தான் என்ற சரித்திரத்தின் கூற்று முதலாம் அக்ரபோதியின் ஆட்சிக்கு முன்பும் கந்தளாயில் குளம் இருந்திருக்கிறது என்பதை ஆதாரப்படுத்துகின்றது.

இக் குளத்தின் அணைக்கட்டை முதல் முதலாக பார்ப்பவர்கள் வியப்பிலாழாமல் இருக்க முடியாது. இயந்திர சாதனங்கள் அற்ற அந்தக் காலத்தில் இப்படி ஒரு பிரம்மாண்டமான அணையை அமைக்க இலட்சக்கணக்கான மக்கள் தினந்தோறும் வேலை செய்தாலும் பல்லாயிரம் வருஷங்களாவது செல்லுமே என்ற எண்ணம் எவருக்கும் வரவே செய்யும்.

எஸ்.பிரகாஷ் (MA)
ஆசிரியர்,
ஸ்ரீ நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரி,
திருகோணமலை.

பாகம் : 07
தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூதாட்டக்காரியாகிய டாப்சி



ரஜினியின் மூத்த மகள் ஐஸ்வர்யா தனுஷ் இயக்கும் இரண்டாவது திரைப்படம் 'வை ராஜா வை'. இந்த படத்தில் டாப்ஸி சூதாட்டக்காரியாக நடிக்கிறார். கவுதம் கார்த்திக், ப்ரியா ஆனந்த் நடிக்கும் 'வை ராஜா வை' படத்தில் டாப்ஸி வில்லனின் தோழியாக நடிக்கிறார். வில்லனுக்கும், கவுதம் கார்த்திக்கும் இடையேயான சூதாட்டத்தில் வில்லனுக்கு நயவஞ்சமாக உதவி செய்வது போன்ற காட்சியில் டாப்ஸி நடித்தார்.

நிஜ வாழ்க்கையில் தான் சூதாட்ட கிளப்பை நேரில் பார்த்ததே இல்லை என்றும் இந்த படப்பிடிப்பில்தான் உண்மையான சூதாட்ட கிளப் எப்படி இருக்கும் என்பதை பார்த்ததாகவும் கூறிய டாப்ஸி, உண்மையான சூதாட்டத்தை வேடிக்கை பார்த்த அவர் இன்னும் கொஞ்சம் நேரம் அங்கேயே இருந்தால் நானும் ஒரு சூதாட்டக்காரியாக மாறியிருப்பேன். நல்ல வேளை அந்த இடத்தை விட்டு வந்துவிட்டேன் என்று கூறுகிறார்.

## கொலை வெறியில் அலியா பட்



நடிகை அலியாபட் மற்றும் வருண் தவான் நடித்த Humpty Sharma Ki Dulhania என்ற திரைப்படத்தின் டிரைலர் வெளீட்டு விழாவில் கலந்துகொண்ட வருண் தவான், நடிகை அலியா பட் அவர்களை விழா மேடையில் சந்தோஷ மிகுதியால் தூக்கினார்.

அப்போது மிக மெல்லிய பஞ்சாப் சூட் போட்டிருந்த அலியா பட்டின் உள்ளாடை வெளியே தெரிந்ததால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. வீட்டிற்கு போன பின்னர்தான் நடிகை அலியா பட் க்கு தன்னுடைய புகைப்படம் மற்றும் வீடியோ இணையதளங்களில் வெளியாகியிருப்பது தெரிய வந்தது. இதனால் நடிகர் வருண் தவான் மீது அலியா பட் கோபத்தில் இருப்பதாக கூறப்படுகிறது.

## தூக்கியெறியப்படுவாரா அமலா

கதைப்படி அமலாபாலுக்கு "மிலி" என்ற கேரக்டர். அந்த கேரக்டர் மிகக்குறைந்த நேரமே வந்தாலும் படத்தின் கதைக்குத் தேவையான மிக முக்கிய கேரக்டர். அதுபோலவே நிவின் "மிலன்" என்ற கேரக்டரில் அதே படத்தில் அமலாபாலுக்கு ஜோடியாக நடிக்கிறார்.



இந்நிலையில் தனது கேரக்டரான "மிலன்" என்ற பெயரைத்தான் படத்தலைப்பாக வைக்க வேண்டும் என்றும் அமலாபாலுக்கு திருமணம் ஆகவிருப்பதால் அவரது கேரக்டர் பெயரில் வைக்கப்படும் தலைப்பு மக்களை ஈர்க்காது என்றும், அதனால் அவரது பெயரை தூக்கியெறிந்துவிட்டு தன்னுடைய கேரக்டர் பெயரை வைக்க வேண்டும் என்றும் அவர் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

## ஜீ.வி க்கு மறைமுக கடிதம்



ஜி.வி.பிரகாஷ், 'த்ரிஷா இல்லைன்னா நயன்தாரா' என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இந்த படத்தின் தலைப்பை தயாரிப்பாளர் சங்கத்தில் பதிவு செய்ய த்ரிஷா மற்றும் நயனிடம் தடையில்லா சான்றிதழ் வாங்கினால் மட்டுமே படத்தின் தலைப்பை பதிவு செய்ய முடியும் என்று கூறிவிட்டனர்.

முதல்கட்டமாக நயன்தாராவிடம் பேசி அவரிடம் அனுமதியும் தடையில்லா கடிதமும் பெறறுவிட்டார். அடுத்ததாக த்ரிஷாவிடம் அவர் விரைவில் பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## மீண்டும் அஞ்சலி



ஜெயம் ரவி மற்றும் காஜல் அகர்வால் நடிக்கும் திரைப்படத்தில் இரண்டாவது நாயகியாக நடிக்க அஞ்சலி ஒப்புக் கொண்டுள்ளார். ஒரு பாட்டுக்கு நடனம் ஆடிய சிங்கம் 2 படத்திற்கு பின்னர் அஞ்சலியின் படம் தமிழில் வெளியாகவில்லை. அஞ்சலி நடித்த மதகஜ ராஜா திரைப்படம் பலவித பிரச்சனைகளால் இன்னும் வெளிவராமல் முடங்கியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

# சினிமுரசு

## சினிமா கூறுஞ் செய்திகள்



- **பிரபல நடிகரை பேட்டியின்போது திட்டிய நடிகை. பாலிவுட்டில் பரபரப்பு.**

பிரபல மராத்தி நடிகை ப்ரியா பாபெட். இவர் அனிகெட் விஸ்வராவ் என்ற மராத்தி நடிகரை பேட்டி ஒன்றில் மடையன் என்றும், முட்டாள் என்றும் திட்டியுள்ளதால் மும்பை ஊடகங்கள் பெரும் பரபரப்புடன் இந்த செய்தியை வெளியிட்டு வருகின்றன.

- **எனக்கு பிடித்ததே அவரது மார்பு மட்டும்தான். டுவிட்டரில் ராம்கோபால்வர்மா**

ரஜினிகாந்திடம் எனக்கு பிடித்ததே அவரது மார்புதான். அதை ஏன் அவர் அனிமேஷனில் விரிவடைய அனுமதித்தார் என்றே தெரியவில்லை. இதை நான் விரும்பவில்லை என்று கூறியுள்ளார்.

- **உதவி இயக்குனர் தள்ளியதால் கீழே விழுந்த நடிகைக்கு காயம்.**

படக்காட்சி ஒன்றை விளக்கிக்கொண்டிருந்தபோது திடீரென எதிர்பாராத வகையில் சோனாக்ஷியை கீழே தள்ளிவிட்டதாகவும், அதனால் அவர் நிலைதடுமாறி கீழே விழுந்து விட்டதாகவும் கூறப்படுகிறது.

- **டார்ஜான் ரீமேக் திரைபடத்தில் நிர்வாணமாக நடிக்க சன்னிலியோன் சம்மதம்**

தற்போதைய ரீமேக்கில் கிமி கட்கர் வேடத்தில் நடிக்க அந்த இயக்குனர் தேர்ந்தெடுத்த நடிகை சன்னிலியோன் என்பது குறிப்பிடத்தக்கது. ஒருசில காட்சிகளில் வெறும் இலைகளை மட்டும் உடையாக அணிந்து நடிக்கவுள்ளதாகவும் கூறப்படுகிறது.

- **சமந்தாவின் தினசரி சாப்பாட்டுச் செலவினால் புலம்பும் தயாரிப்பாளர்கள்.**

ஸ்டார் ஓட்டலில் தலைமை சமையல்காரர்களாக பணிபுரிந்த இரண்டு சமையல் கலைஞர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். சமந்தாவின் உணவுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.40,000 மொத்தம் செலவாகிறது.

## ரிலையன்ஸிடம் 'ஐ'




இப்போது ஆஸ்கர் பிலிம்ஸ் தயாரிப்பில் ஷங்கர் இயக்கி வரும் ஐ படத்திற்கும் பைனான்ஸ் பிரச்சினை ஏற்பட்டுள்ளது. விக்ரம், எமி ஜாக்சன் நடித்துள்ள இப்படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு முடிந்து விட்டது.

இன்னும் சில காட்சிகளும், ஒரு பாடலும்தான் பேலன்ஸ் உள்ளது. இந்த நிலையில், தனக்கு பேசப்பட்ட பணம் வரவில்லை என்று கோபித்துக்கொண்டு லண்டனுக்கு பறந்து விட்டார். இந்த நிலையில், தற்போது ரிலையன்ஸ் நிறுவனத்திடம் ஐ படத்தை கைமாற்றி விட்டு இறுதிகட்ட பணிகளை முடிக்க ஷங்கர் தரப்பு முயற்சி எடுத்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

### திரை விமர்சனம்

## கோச்சடையான்




ஒரு சரித்திரக்கதை இவ்வளவு அழுத்தமான திரைக்கதையுடன், திடுக்கிடும் திருப்பங்களுடன் எம்.ஜி.ஆர்., சிவாஜி காலத்தில் கூட வந்ததில்லை என்று எண்ணுமளவுக்கு மிக அருமையான திரைக்கதையுடன் அமைந்த படம்தான் கோச்சடையான்.

படம் ரிலீஸாவதற்கு முன் வந்த கேலியான, விமர்சனங்களை எல்லாம் உடைத்தெறிந்து கம்பீரமாய் வலம் வந்துள்ளது கோச்சடையான். கே.எஸ்.ரவிகுமாரின் மிக அபாரமான திரைக்கதை வசனம், ஏ.ஆர்.ரஹ்மானின் உலகத்தரம் வாய்ந்த பின்னணி இசை, ரஜினிகாந்த்தின் காந்தக்குரல் இவை மூன்றும்தான் படத்தை உச்சநிலைக்கு கொண்டு சென்றுள்ளது.

அவதார் அளவுக்கு மோஷன் கேப்ட்சரிங் டெக்னாலஜியை நினைத்து பார்த்து படம் பார்க்க சென்றவர்களுக்கு பெரும் ஏமாற்றமே கிடைக்கும். ஆனால் இந்திய அளவில் இது ஒரு புதுமுயற்சி, அதுவும் முதல் படத்திலேயே இப்படியொரு முயற்சியை எடுத்து பிள்ளையார் சுழி போட்ட சௌந்தர்யாவை கண்டிப்பாக பாராட்டலாம். ரியல் ரஜினியை பார்த்து பழகிய ரஜினியை பொம்மை போன்ற உருவத்தில் பார்க்க ரசிகர்களுக்கு ஏமாற்றமாக இருந்தாலும், அந்த ஏமாற்றத்தை ஒரு சில நிமிடங்களில் சரிசெய்துவிட்டார்கள் ரவிகுமாரும், ரஹ்மானும்.

கோட்டைப்பட்டினம் நாட்டின் படைத்தளபதி கோச்சடையான். எதிரி நாட்டுக்கு போருக்கு சென்றபோது நயவஞ்சமாக துரோகி பட்டம் சாட்டப்பட்டு மரண தண்டனைக்கு ஆளாகிறார்கள். தந்தைக்கு ஏற்பட்ட துரோகி பட்டத்தை துடைத்தெடுக்க புறப்படும் ராணா, ராஜதந்திரங்களை கடைபிடித்து தந்தைக்கு ஏற்பட்ட களங்கத்தை துடைத்து எதிரியை பழிவாங்கும் சாதாரண கதைதான். ஆனால் இந்த கதையை கையாண்ட விதம், அமைத்துள்ள காட்சிகள்தான் பிரமிக்க வைக்கின்றது.



மோஷன் கேப்ட்சன் டெக்னாலஜியை ரஜினிக்கு மட்டும் சரியாக பயன்படுத்திவிட்டு மற்றவர்களை ஏனோதானோ என்று எடுத்து பட்ஜெட் கருதியே என்று படம் பார்க்கும்போதே தெரிகிறது. தீபிகா படுகோனேவை பார்ப்பதற்கு ஏதோ ஒரு துணை நடிகையை பார்ப்பது போல் இருக்கிறது. சரத்குமார், ஆதி, நாசர் எவருக்குமே டெக்னாலஜி ஒத்துழைக்கவில்லை. நாகேஷின் உருவத்தை மட்டும் மிக அழகாக வடிவமைத்துள்ளார் சௌந்தர்யா.

படத்தின் மிகப்பெரிய பிளஸ் ஏ.ஆர்.ரஹ்மானின் இசை. இதைவிட அற்புதமான பின்னணி இசையை ஹாலிவுட் கலைஞர்களால்கூட கொடுக்க முடியாது என்றே எண்ண தோன்றுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சிறிய ரக விமானம்

ஆடம்பரமான சிறிய ரக விமானத்தை வடிவமைத்தது ஹொண்டா ஐ திங்கட்கிழமை, 26 மே 2014, 02:35.25 மு.ப GMT மோட்டார் வாகன உற்பத்தியில் முன்னணி வகிக்கும் ஜப்பான் நிறுவனமான ஹொண்டா 6 பேர் பயணிக்கக்கூடிய ஆடம்பர விமானத்தினை வடிவமை த்துள்ளது.

2003ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட HondaJet திட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்ட இந்த விமானம் மணிக்கும் 420 மைல்கள் தூரம் பயணம் செய்யக்கூடியது. சுமார் 4.5 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறமதியான இந்த விமானம் அடுத்த வருடத்தில் அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இது தவிர 2017ம் ஆண்டளவில் ஸ்டார் வார் (Star War) திரைப்படத்தில் பயன்படுத்தப்பட்ட "ஹவர் பைக்கிளை அறிமுகப்படுத்த திட்டமிட்டுள்ளதாக ஹொண்டா தெரிவித்துள்ளது.

# விளையாட்டுப் பையன்

## Windows Phone Store அதிரடி நீக்கம்


மொபைல் சாதனங்கள் மூலம் குறுஞ்செய்திகள், புகைப்படங்களை செலவின்றி பகிர்ந்து கொள்வதற்கு WhatsApp அப்பிளிக்கேஷன் பெரிதும் உதவுகின்றது. அண்மையில் பேஸ்புக் நிறுவனத்தினால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த இந்த அப்பிளிக்கேஷனின் Windows Phone களுக்கான பதிப்பு Windows Phone Store தளத்திலிருந்து அதிரடியாக நீக்கப்பட்டுள்ளது.

மைக்ரோசொப்ட் நிறுவனம் அறிமுகம் செய்த பிந்திய பதிப்பான Windows Phone 8.1 இயங்குதளத்தில், WhatsApp அப்பிளிக்கேஷன் செயற்படும்போது சில குறைபாடுகள் காணப்படுவதே இதற்கு காரணம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டாட்டா 'லைபை'

ஒரு வாட் பல்பை வாங்கி எரிய விட்டால் போதும், அடுத்த நொடி இன்டர்நெட்டுக்கு உயிர் வந்துவிடும். லைட்டை ஆப் செய்து விட்டால் இன்டர்நெட்டுக்கான 'லைபை' போய் விடும். ஒரு பல்பு எரியவிட்டால் நான்கு கம்ப்யூட்டர் வரைக்கும் இன்டர்நெட்டை பயன்படுத்த முடியும்.

விநாடிக்கு 150 மெகாபைட் வேகம் கொண்டதான இந்த "லைபை" குறித்து இன்னும் ஆராய்ச்சிகள் தொடர்கின்றன.



வர்த்தக ரீதியாக பயன்படுத்த முழு அளவில் தயாரிக்கப்படும் என்று இதை கண்டுபிடித்த ஷாங் காய் பல்கலைக்கழக பேராசிரியர் சிநான் கூறினார்.


லெட் வகை பல்பில் மைக்ரோசிப் பொருத்தப்பட்டிருக்கும். அதன் மூலம் அலைக்கற்றைகள் எழுப்பப்பட்டு, இன்டர்நெட் வசதி ஏற்படுத்தப்படுகிறது.

வழக்கமான 'வைபை' வசதி, ரேடியோ அலைகளை கொண்டு ஏற்படுத்தப்படுகிறது. அதன் மூலம் இன்டர்நெட் உயிர்பெறுகிறது. ஆனால், இந்த ஒரு வாட் பல்பை வைத்து சீனா, இன்டர்நெட்டை பயன்படுத்த முடியும் என்று கண்டுபிடித்துள்ளது.

## புதிய வடிவில் Lamborghini



இத்தாலியைச் சேர்ந்த பிரபல கார் உற்பத்தி நிறுவனமான Zagato தனது புதிய வடிவமைப்பில் உருவான Lamborghini 5-95 Zagato காரினை அறிமுகம் செய்துள்ளது. மிகவும் கவர்ச்சிகரமாக வடிவமைக்கப்பட்டுள்ள இக்கார் Lamborghini Gallardo LP570-4 எனும் காரின் வடிவத்தினை அடிப்படையாகக்கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது. எனினும் இக்காரின் பெறுமதி மற்றும் ஏனைய வசதிகள் தொடர்பான மேலதிக தகவல்கள் இதுவரை வெளியாகவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## ஸ்மார்ட் கடிகாரம்

அப்பிள் நிறுவனம் உட்பட மேலும் சில நிறுவனங்கள் ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் மும்முரமாக ஈடுபட்டு வருகின்றன.

ஏற்கனவே தனது ஸ்மார்ட் கைக்கடிகார உற்பத்தியில் ஈடுபட்டுள்ள அப்பிள் நிறுவனம் அதனை இந்த வருடம் அறிமுகம் செய்யவுள்ள நிலையில், தற்போது புதிய தொழில்நுட்பத்திலும், புதிய வடிவமைப்பிலுமான மற்றுமொரு ஸ்மார்ட் கடிகார உற்பத்தியில் களமிறங்கியுள்ளது.

iOS 7 இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்படவுள்ள இக்கடிகாரம் பெண்களக்காக 1.3 அங்குல அளவுடைய திரையினையும், ஆண்களுக்காக 1.7 அங்குல அளவுடைய திரையினையும் கொண்டதாக வடிவமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## ஒரு கொலையின் கதை

2-14

ஜாயன்

**ஒரு உண்மைச் சம்பவத்தைத் தழுவிய கதை...... கதையொன்றில் புனைவுகள் இருப்பதைப் போல இக் கதையிலும் புனைவுகள் உள்ளன.**

அடுத்து படுக்கையபைப் பிரட்டிப் பதபாதகமாகப் பரீட்சித்த போதும் எதுவும் அங்கு கிடைக்கவில்லை.... எஞ்சிக் கிடந்தது இன்னும் ஒரு உடுப்புப் பெட்டிதான்....

அதை இழுத்தெடுக்க விரும்பாமல் முதலில் படுக்கைக் கட்டிலை மெதுவாக மடித்து மூலையொன்றில் சாய்த்து வைத்து விட்டு அந்தப் பெட்டியை திறந்தபோதே.........

(13)

.................................................................................

வீச்சம் (வித்தியாசமான மணம்) ஒன்றை புலனாய்வாளர்கள் நுகர்ந்தார்கள்.....

அப்போதே அவர்களின் புலனுணர்வு விழித்துக் கொண்டது. தமது கையுறைகளைப் பரிசோதித்து விட்டு மெதுவாக ஒவ்வொரு உடையாக அந்தப் பெட்டியிலிருந்து வெளியேடுத்த போது வெள்ளை நிறப் பையொன்று அந்தப் பெட்டிக்குள் பத்திரப்படுத்தப்பட்டிருந்தமை தெரிந்தது.....

இரண்டாக மடிக்கப்பட்டிருந்த அந்த வெள்ளைப்பையினுள் சில உடைகள் இருப்பதையும் அந்த உடைகளிலிருந்தே அருவருக்கத்தகக...ஆனால் இனம் புரியாத மணம் மெலிதாக வீசுவதையும் அவர்கள் உணர்ந்து கொண்டனர். கவனமாக அந்தப் பையைத் திறந்த போது .....அந்த உடைகள் அவர்களது கண்ணுக்குப் புலனானது....

அந்த உடைகளை மிகக் கவனமாக வெளியே கையை வைத்து எடுக்க முனைந்தார் ஒரு புலனாய்வாளர்.... உடனடியாகவே மற்றையவரின் கை அந்தச் செய்கையை தடுத்தது....

தடுத்த புலனாய்வாளர் தனது இடுப்புப் பட்டியிலிருந்து பல்தேவைப் பயன்பாட்டைக்கொண்ட சிறு கருவியை எடுத்து அதிலிருந்த கத்தியை விரித்தார்.....

இப்போது உடைகளைக் கொண்ட அந்தப் பை வெறும் நிலத்தில் வைக்கப்பட்டிருந்தது. அப் பையின் இரண்டு அந்தங்களைமட்டும் மெதுவாகத் தனது கத்தியால் கிழத்தார் புலனாய்வாளர்... இப்போது ஒரு புத்தகத்தின் பக்கமொன்றைத் திருப்புவது போல அந்தப் பையின் கிழக்கப்பட்ட அந்தங்களைத் திறந்தபோது

அந்த உடைகள் .... இரத்தக்கறை தோய்ந்து காய்ந்த உடைகளாக இருந்தமை தெளிவாகத் தெரிந்தது....

ஆம்.... கொலைப் புத்தகமொன்றின் ஆதாரப் பக்கமொன்றை புதிய அத்தியாயத்துடன் அந்தப் பை அவர்களுக்காகத் திறந்தது......

இரத்தம் தெறித்து ஆங்காங்கே புள்ளிகளாகிக் காய்ந்து ...கறுத்து ... நெடிலடிக்கும் உடைகளாக அவை இருந்தன.

மெதுவாக அந்த முதலாவது ரிசேர்ட்டை புலனாய்வாளர் பிரித்தார்....

மெதுவாகப் பிரிந்து திறந்த அந்த ரிசேர்ட் செம்மஞ்சள் நிறமான ஆண்கள் அணியும் ரிசேர்ட்..... அந்த ரிசேர்ட்டின் செம்மஞ்சள் நிறத்தையும் மீறிக் காய்ந்து கறுத்திருந்த இரத்தத்துளிகள் அவலமொன்றின் கோலத்தை அந்த ஆடையில் வரைந்திருந்தன....

ஒரு புலனாய்வாளர் அந்த ரிசேர்ட்டின் முன்புறத்தை அவதானித்த அதே வேளை அடுத்தவர் அதன் பின்புறத்தை அவதானித்தார். பின்புறத்தில் முன்புற இரத்தச் சிதறல்கள் ஊறி மெல்லிய படையாகப் பின்புறத்தில் கறுப்புப் படிவுகள் காணப்பட்டன.....

ஆக... அந்த ரி சேர்ட குறித்த இரத்தம் சிதறிய குறகிய நேரத்திற்குள் உடம்பிலிருந்து அகற்றப்பட்டு பொதியிடப்பட்டிருக்கின்றது.... அதனால்தான் அந்த ரிசேர்ட்டின் பின்புறத்திலும் இலேசான கசிவு ஊறிப் படிந்துள்ளது என்பதை அவர்கள் உணர்ந்து கொண்டார்கள்.

அந்த ரி சேர்ட்டில் உள்ள இரத்தச் சிதறல்களை அவர் எண்ணத் தொடங்கினார்....."ஒன்று....இரண்டு...." என நீண்ட அந்த எண்ணல் எட்டுடன் முடிவடைந்தது. எட்டு இரத்தப் புள்ளிகள் அந்த ரிசேர்ட்டில் தெறித்துக் கறுத்திருந்தன...

மிகக் கவனமாக அதனைப் பொதிசெய்த பின்னர் அவரது கைக்கு மாட்டிய அடுத்த உடை ஒரு கறுப்பு நிற ரிசேர்ட்.

அந்தக் கறுப்பு நிற ரிசேட்டுடன் இணைந்ததாக வெளி வந்த உடை நீல நிற டெனிம் முழுக் காற்சட்டை.....

அந்த இரண்டு உடைகளும் எவ்விதக் கறைகளுமின்றித் தெளிவாக இருந்தன... அவ்வாறாயின் ஏன் இந்த இரத்தம் படிந்த உடையுடன் அந்த இரண்டும் கலந்திருந்தன.... அந்தக் கேள்வி எழுந்தபோது அவர்கள் ஒருவரை ஒருவர் அர்த்த புஸ்டியுடன் பார்த்துக்கொண்டனர்.....

ஆம் கொலை நடந்த போது அயிந்திருந்த ரிசேர்ட் அக் கொலை நடந்த போது தெறித்த இரத்தம் முழுதாகக் காய முன்..... சந்தேகநபரால் மாற்றப்பட்டுள்ளது. அப்போத மாற்றியணிந்த உடை தான் இந்தக் கறுத்த ரிசேர்ட்டும்... நீல நிற டெனிம் முழுக்காற்சட்டையும்... அவ்வாறெனில் கொலை நடந்த போது அணிந்திருந்த கிழாடை எங்கே.....

அந்தக் கீழாடையும் அதே பையினுள் இறுதியாகக் கிடந்தது....

மண்நிற முழுக் காற்சட்டையான அக் காற்சட்டைதான் சந்தேகநபரால் கொலை நடந்தபோது அணியப்பட்டிருந்தது என்பதை நிரூபிக்கும் முகமாகத் தனது முன்புற மற்றும் பின்புறப் பக்கங்களில் எண்ணிக்கணக்கற்ற இரத்தப் புள்ளிகளைச் சிதறலாகக் கொண்டிருந்தது

அந்தக் காட்சட்டைணைத் தனது கைகளில் தாங்கி சற்று மேலே உயர்த்திய புலனாய்வாளர் ஒருவர் முன்புறமாகப் பறந்திருந்த இரத்தப் புள்ளகிளக் கணக்கிட்டார்......

அவை பதியொரு எண்ணிக்கையைத் தொட்டன. அதே வேளை மற்றையவர் அந்த முழக் காற்சட்டையின் பின்புற இரத்தப் புள்ளிகளைக் கணக்கிட்டார்.... அவை நான்கு எண்ணிக்கையைத் தொட்டன... ஆக மொத்தம் பதினைந்து இரத்தப் புள்ளிகள்.....

கிழிந்து கிடந்த அந்த வெள்ளைப் பை தனது கடமையை முடித்துக் கொண்டது போல்... தனது சுமையை இறக்கி வைத்தது போல்... காற்றின் அலைக்கழிப்பை ஏற்று அந்த வீட்டின் சுவர்களிடையே ஊசலாடத் தொடங்கியது......


அசாத்திய மௌனம் குடிகொண்டிருந்த அந்தக் கணத்தில்...... காற்றின் அலைவில் அந்தக் கிழந்த பை ஏற்படுத்திய சத்தங்கள் என்றோ ஊசலாடிப் பிரிந்த உயிரின் அவலத்தை மீள அந்த அறைக்குள் ஏற்படுத்திக்கொண்டிருந்தது.....

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாழ்வியல்**

# "சினேகமும் துரோகமும்"



(வி.என்.சந்திரகாந்தி)

எமது வாழ்கையானது சிநேகம் என்ற அத்திவாரத்தின் மேல் தான் கட்டியெழுப்பப்பட்டுள்ளது. தாயானவளுக்கும் குழந்தைக்கும் இடையே உள்ள சிநேகத்தை பாசம் என்பர். உறவினர் களுக்கிடையேயானது அன்பு. ஆண் பெண் பாலாருக்கிடையே மலர்வது காதல். மனிதனுக்கு கடவுள் மேல் ஏற்படுவது பக்தி. உரிமையுடனான சிநேகம் நட்பு ஆகும்..!

மிருகங்கள் பறவைகள் கூட சிநேக உணர்வுடன் ஒன்றை மற்றையது நேசித்து வாழ தெரிந்து கொண்டுள்ளது.

அன்னை தெரேசா மனிதகுலத்தின் மீது பொழிந்தது பாசம் சத்தியமே தருமம் என வாழ்ந்த மஹாத்மாகாந்தி சகல உயிரினங்களிடத்தும் அன்பு பாராட்டினார்.

அம்பிகாவதி அமராவதி காதலுக்கு ஒப்பு உவமை இல்லை!

அப்பர், சம்பந்தர், மாணிக்கவாசகர் இறைவன்மேல் கொண்ட சினேகம் பக்தியாக பிரவாகித்தது.

சுந்தரர் இறைவனை நேசித்தார். அது நட்பாக மலர்ந்தது. பின்னர் பக்தியாக மாறியது.

நாங்கள் யார் யார் மேல் சிநேகம் கொண்டுள்ளோம் என்பதை எப்போதாவது எடைபோட்டு பார்த்துள்ளோமா? ஏன்? இது ஒரு முக்கியமான விடயமே கிடையாதா?

உண்மையில் எமது வாழ்க்கையின் வெற்றி முற்று முழுதாக எமது சிநேகத்தில்தான் தங்கி உள்ளது.

சிநேகங்கள்தான் வெற்றியை ஈட்டி கொடுக்க வல்லது..

கண்ணனுடனான நட்பு அர்ச்சுனனுக்கு வெற்றியை ஈட்டிக் கொடுத்தது... அனுமருடனான நட்பு இராமருக்கு வெற்றியை தேடித்தந்தது..
தந்தை,தாய், மனைவி,குழந்தைகள், ஆசிரியர்கள்-அதிகாரிகள், நண்பர்கள்-வழிகாட்டிகள் என்று நாம் சிநேகம் பாராட்டும் அனைத்து உறவுகளும் எம்மேல் உண்மையான அன்பை பொழிவார்களேயானால் எமது வாழ்க்கை சிகரம் அளவுக்கு உயர்ந்து விடும். எனவே நாம் பழகும் அனைவருடனும் விழிப்புடன் இருக்க வேண்டும்.
எமது வாழ்க்கையில் சறுக்கல்கள் ஏற்படுகின்றன என்றால் நாம் உடனே எமது சிநேகங்கள் மீதே சந்தேகம் கொள்ள வேண்டும்..

ஒரு கவலையான விடயம் என்னவென்றால் வாழ்க்கையில் எமக்கு உண்டாகும் நெருக்கடி களுக்கெல்லாம் காரணகர்த்தாக்கள். நாம் நேசிக்கும் உறவுகளே! எதிரிகள் அல்ல!
நீங்கள் கட்டாயம் அறிந்திருக்க வேண்டியது இந்த உலகத்தில் எல்லாமே இரட்டையாகவே உள்ளன. இரவு-பகல், குளிர்-வெப்பம், வன்மை-மென்மை, மலை-பாதாளம், கறுப்பு-வெள்ளை!

ஒன்று இருந்தால் மற்றையதும் இருக்கும் என்ற வகையிலேயே இந்த பிரபஞ்சம் படைக்கப்பட்டுள்ளது.

அந்த வகையில் நீங்கள் விழிப்பாக இருங்கள்□!
சினேகத்தின் மறுபக்கம்தான் துரோகம.சகுனியானவன், பாண்டவர்களுக்கு தொடர்ந்து துரோகம் செய்தான் அவர்களை வானவாசம் அனுப்பினான்...
கூனியானவள், இராமர் சிறு வயதில் விளையாட்டாக அவள்மேல் அம்பு எய்த கோபத்தை மனதில் வைத்து அவரை வனவாசம் அனுப்பினாள்.
இந் நாட்களில் எம்மைச் சுற்றி நிறையவே சூதாட்டங்கள் நடக்கின்றன.
கணவன் மனைவி ஒருவருக்கொருவர் துரோகம் இழைத்தால் அது மணமுறிவிலும் சில சமயம் கொலை, தற்கொலை என முடிவடையும்.
காதலர் இருவருக்கிடையே ஏற்படக்கூடிய துரோகம் வன்முறையிலும் பழிவாங்கலிலும் முடிவுறும்.
நண்பர்களுக்கிடையே ஏற்படும் பகை காரணமான துரோகம் பழிவாங்கலில் முடியும்.
அதிகாரிக்கும் தொழிலாளிக்கும் இடையில் ஏற்படும் மனமுறிவுநிமித்தமான துரோகம் தண்டனையில் முடியும்.

நீங்கள் உங்கள் குடும்ப வாழ்விலும் சரி, பொதுவாழ்விலும் சரி, தொழில் பார்க்குமிடத்திலும் சரி உங்களுக்கு மற்றவர்கள் துரோகமிழைத்து விடாதபடி விழிப்புடன் இருப்பது உங்கள் கடமை!

எனக்கு நண்பர் ஒருவர் இருந்தார... அவரது அரச சேவைக்கு அப்பால் அவர் பொது தொண்டில் இறங்கி மக்களுக்குப் பல நன்மைகள் புரிந்தார். பத்து வருடங்கள் அப்படி சென்றிருக்கும். அவரது பெயரும் ஓங்கி இருந்தது. திடீரென அவரைப்பற்றி சில கட்டுக்கதைகளும் மொட்டைக்கடிதங்களும் வெளிக்கிளம்பின. பொது தொண்டில் ஈடுபட முடியாத அளவுக்கு அவருக்கு தொல்லைகள் மற்றும் நெருக்கடிகள் ஏற்படுத்தப்பட்டன. அவரும்.. "அட போங்கடா பைத்தியக்காரர்களே" என்று கூறி பொதுச்சேவையிலிருந்து விலகி எழுத்துத் துறையில் நாட்டம் செலுத்தினார். இன்று பல விருதுகளும் பெற்ற ஒரு எழுத்தாளராக அவர் திகழ்கிறார்..!

# செல்வநாயகபுரம் புனிதவனத்து அந்தோனியார் ஆலயத் திருவிழா

எகிப்தில் மெம்பிஸ் என்ற இடத்திற்கு அருகாமையில் வாழ்ந்த செல்வந்தக் குடும்பத்தில் கி.பி.251இல் உதித்து, 18வது அகவையில் பக்தியுள்ள பெற்றோரை இழந்த அவரை, "நிறைவுள்ளவராக விரும்பினால் நீர் போய், உம் உடைமைகளை விற்று ஏழைகளுக்குக் கொடும். அப்பொழுது விண்ணகத்தில் நீர் செல்வராய் இருப்பீர். பின்பு வந்து என்னைப் பின்பற்றும் (மத் 19:21) என்ற வார்த்தையால் தூண்டப்பட்டு, சொத்துக்களையெல்லாம் விற்று, ஏழைகளுக்கு அளித்துவிட்டு, துறவறத்தை ஏற்றவரான புனித வனத்து அந்தோனியார் என்பவரை செல்வநாயகபுரம் என்னும் எம்மிடத்தின் பாதுகாவலராகத் தேர்ந்துள்ளோம்.

துறவிகளின் பிதாப் பிதாவும், துறவற வாழ்வின் தாபகருமான புனித வனத்து அந்தோனியாரின் நாமம் கொண்ட செல்வநாயகபுரத் தேவாலயத்தின் திருவிழா 23.05.2014 அன்று கொடியேற்றத்துடன் பிப 5.15 மணிக்கு ஆரம்பமாகி, திருநாள் திருப்பலி 01.06.2014 ஞாயிறு அன்று காலை 7.00 மணிக்கு திருகோணமலை மறைமாவட்ட ஆயரின் பிரதிநிதி அருட்பணி. கி. நோயல் இம்மானுவேல் தலைமையில் சிறப்பிக்கப்படும். இறையாசீர் பெற்று இன்புற்றிடுங்கள்.
தகவல். ஜெயவதனி மரியதாஸ்.

# சமாதான நீதவான்



திருகோணமலையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மீராசாகிபு அசனார் சபீனா, திருகோணமலை மாவட்ட சமாதான நீதிவானாக திருகோணமலை மாவட்ட நீதிமன்ற நீதவான் ரீ.ஐ.பிரபாகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். இவர் திருகோணமலை ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின் பழைய மாணவியும், YMCA கழகத்தின் அங்கத்தவரும், சிறந்த சமூக சேவையாளரும், பத்திரிகையாளரும் ஆவார். இவர் மீராசாகிபு அசனார் (சமாதான நீதிவான்)-ஜெமிலா தம்பதியினரின் புதல்வியும் ஆவார்.

# குறுக்கெழுத்து புதிர் 011

**போட்டி முடிவுத் திகதி : 05.06.2014**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | | | | 2 | | 17 | ■ | 18 |
| 15 | 16 | ■ | ■ | | 3 | | 19 | 25 |
| | 4 | | ■ | | 5 கி | | | |
| | | 6 | க | | | | | |
| 21 | | 7 | | 24 | | 23 | | ■ |
| 8 | | | ■ | | ■ | 9 | | |
| | ■ | | 26 | ■ | 10 | | | 20 |
| ■ | 12 | | 13 | | ■ | 22 | | டு |
| 11 | | ■ | | ■ | 14 | | ■ | |

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்.
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 150, ரூபா 100, ரூபா 50 பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி :
மலைமுரசு. இல - 159ஏ,
கடற்கரைக்காட்சி வீதி, திருகோணமலை.

## இடமிருந்து வலமாக

1. காகம்
2. தலைவனின் பெண்
3. இது நான்கு உண்டு.
4. பெண்
5. தண்ணீருக்குள் இது ஏற்படலாம்.
6. முன்னிருந்தும் பின்னிருந்தும் ஒரே சொல்லாக தெரியும் ஒரு சொல்
21. வாழை போடுவது (வலமிருந்து இடமாக)
7. முஸ்லிம்களுக்குச் சொந்தமானது.
8. டயரி மில்க் சொக்கலட் எதன் DNA ஐ ஒத்ததாம்?
9. ஆலமரத்திற்கு முக்கியமான ஒன்று
10. இவை 64 உள்ளன.
11. கொழுத்தினால் சத்தம் போடுவது
12. உணவில் எதிர்பார்ப்பது
13. மழையால் இது வரலாம்
14. ............ மாறிப் போகின்றது இக் கலிகாலம்.
19. சிங்கத்தின் இருப்பிடம்.
24. மனித உடல் நிலையானதல்ல. ஆனால் ............... என்றும் அழியாதது.

## மேலிருந்து கீழாக

1. மிகச் சிறியதை இப்படியும் சொல்லலாம். (குழம்பியுள்ளது)
2. இணை மொழிச் சொல் ஒன்று
7. ஐவகை நிலங்களிலொன்று
15. மான் ......................... ஓடியது.
16. நன்றாகப் பாடினால் இது கிடைக்கும்.
17. படகின் இயந்திரம்
18. புகைவண்டிகள் பாதுகாப்பாக ஓடத் தேவையானது.
19. நீங்கள் செய்து கொண்டிருப்பது
20. தலைமயிரில் பிடிப்பது. (கீழிருந்து மேலாக)
21. இந்தியர்கள் உணவை இவ்வாறும் கூறுவர்.
22. மதுவில் கிடைப்பது
23. தோரணத்துடன் கட்டப்படுவது.
24. மயானத்தில் உலாவுவதாக நம்பப்படுவது
25. கைகளால் செய்யப்படுவது.
26. பூக்கள் தருவது.

## குறுக்கெழுத்து புதிர் 010 ற்கான விடைகள்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 1 சி | வ | 12 பா | ளொ | ளி | 21 த | ம | லை | ■ |
| வ | ■ | க | ■ | ■ | 11 டு | ம் | க | 15 சூ |
| ன | 2 ம | ன் | ன் | ண | ண் | 19 க | 10 ம | 16 து |
| 3 டி | ச | ம் | ப | ர் | ■ | வி | ல் | ஷ் |
| 22 யா | னை | 13 ம | 24 பி | 23 சி | ■ | 18 வ | ஹா | ட |
| ர் | 20 க | ர | ■ | லை | ■ | ர | ச | ன் |
| 4 தெ | ளி | வு | ■ | ■ | 9 றி | லா | ன் | 17 ன் |
| ■ | 5 ந | ரி | ■ | 14 ப | ய | று | ■ | ச |
| 6 தொ | ழு | ம் | 7 பு | ன் | ன | கை | ■ | 8 ஈ |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி

பின்வரும் கவிதையை வாசித்து விடையளிக்கவும்.

செக்கச் சிவந்த செங்கதிரோனும்
கிழக்கினில் வந்துவிட்டான் - புவி
மக்கள் கண்விழித்துக் கிளம்பிட
வானில் உதித்துவிட்டான்

கொக்கரக்கோவெனக் கோழியுங் கூவுது
கொக்கோடு பற்பல புட்களும் மேவுது
சக்கரம் போலவே ஜகம் சுழன்றாடுவது
தொக்கி நின்ற இருள் சொல்லாமல் ஓடுது.

01. இங்கு உள்ள உவமானத்தை எழுதுக. ..............................

02. நின்ற இருள் சொல்லாமல் ஓடுது என்பதன் மூலம் கவிஞர் வெளிப்படுத்த முயலும் கருத்து யாது?

03. இக்கவிதைகளில் வருணிக்கப்படும் காட்சி என்ன என்பதை எழுதுக.

04. பின்வரும் ஒவ்வொன்றினதும் கருத்தை எழுதுக.

1. செக்கச்சிவந்த ...................... 2. கண்விழித்தல் ......................

05. இக் கவிதையில் குறிப்பிடப்படும் இரு பறவைகளின் பெயர்களை எழுதுக.

ஒலி வேறுபாடுகளை அவதானித்து வாக்கியங்கள் எழுதுக.

06. இரை ........................................

இறை ........................................

07. பானம் ........................................

பாணம் ........................................

08. வழி ........................................

வலி ........................................

09. கிளி ........................................

கிலி ........................................

10. குழவி

குளவி ........................................

11. அலுமினியப் பாத்திரத்தில் சமைக்கப்படும் உணவுடன் கலக்கப்படாத பொருள்
1. கறுவா 2. கொரக்காய் 3. வெள்ளைப்பூடு 4. இஞ்சி

12. ஒருவரிடமிருந்து இன்னொருவருக்கு நேரடியாக தொற்றக்கூடிய நோய் எது?
1. மலேரியாக் காய்ச்சல் 2. இருதய நோய்
3. அம்மை நோய் 4. நீரிழிவு நோய்

13. உலோகப் பாத்திரங்களில் இட்டு வைக்கக் கூடிய பொருள்
1. மிளகாய்த்தூள் 2. மிளகு 3. கறியுப்பு 4. சீனி

14. ஒரு குவியலிலுள்ள 612 மாம்பழங்களை 9 பேருக்கு சமமாக பங்கிட்டால் ஒருவருக்கு 68 பழங்கள் கிடைத்தன. அப்பழங்களை 6 பேருக்கு சமமாக பங்கிட்டால் ஒருவருக்கு எத்தனை பழங்கள் கிடைக்கும்?

ஒரு பெட்டியில் 2 இலக்கம் கொண்ட எண் அட்டைகளும், 4 இலக்கம் கொண்ட எண் அட்டைகளும் உள்ளன. இரு வகையான எண் அட்டைகளின் மொத்த எண்ணிக்கை 30. எண்அட்டைகளிலுள்ள இலக்கங்களின் கூட்டுத்தொகை 70 ஆகம்.

15. 2 இலக்கம் கொண்ட எண் அட்டைகள் எத்தனை?
1. 20 2. 25 3. 30

16. 4 இலக்கம் கொண்ட எண் அட்டைகள் எத்தனை?
1. 15 2. 10 3. 5

கண்ணன், வாணியின் சகோதரனாகும். வாணிக்கு ஒரு அண்ணாவும், இரண்டு தங்கைகளும், ஒரு தம்பியும் உண்டு.

17. கண்ணனுக்கு எத்தனை சகோதரர்கள் உண்டு?
1. 1 2. 2 3. 3

18. கண்ணனுக்கு எத்தனை சகோதரிகள் உண்டு?
1. 4 2. 3 3. 2

19. கண்ணனின் குடும்பத்தில் எத்தனை பேர் உள்ளனர்?
1. 7 2. 8 3. 9

20. ஒரு வரிசையில் முன்னாலிருந்து கணக்கிடும் போது 6வதாக நோயல் அமர்ந்திருந்தான். மறுபக்கத்திலிருந்து கணக்கிடும் போது, நான்காவதாக அமர்ந்திருந்தது நான் எனின், அந்த வரிசையில் எத்தனை பேர் உள்ளனர்.
1. 9 2. 8 3. 10



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

## நன்றி மறப்பது நன்றன்று

குட்டிக் கதை

ஒருநாள், முனிவர் ஒரு பணக்கார பெண்மணியின் வீட்டருகே அவர்கள் நடந்தனர். அப்போது ஒரு சிறிய பெண் குழந்தை அந்த வீட்டிலிருந்து வெளியே வந்த குழந்தை ஒரு தட்டு நிரம்ப ரோஜா மலர்களைக் கொண்டு வந்து சித்தானந்தர் அதை ஏற்றுக் கொள்ள வேண்டும் எனக் கேட்டுக் கொண்டது.

ஒரு ரோஜா மலரை மட்டும் எடுத்துக் கொண்டு தட்டை சீடர்களிடம் நீட்டினார். சீடர்களுக்கு சொல்லவா வேண்டும். தலைக்கு இரண்டு மூன்றாக அவர்கள் மலரை அள்ளிக் கொண்டனர்.

இவ்வாறு மக்கள் கொடுக்கும் தானங்களை சீடர்களுடன் பகிர்ந்து கொண்டார்.

ஏழை விதவைப் பெண்ணொருத்தி அங்கே நின்று கொண்டிருந்தாள். அவள் ஞானியை தன் சிறிய வீட்டுக்கு வருமாறு அழைத்தாள். அவளது அழைப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டார். அவரும் சீடர்களும் உள்ளே சென்று அமர்ந்தனர்.

"ஐயனே, நீங்கள் இதைச் சாப்பிட வேண்டும்," என்று கூறி ஒரு தட்டை நீட்டினாள். தட்டைப் பெற்றுக் கொண்ட ஞானி அதில் திராட்சைப் பழங்கள் இருந்ததை பார்த்தார்.



ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டார். சுவைத்து உண்டார். சீடர்கள் பார்த்துக் கொண்டே இருந்தனர். மீண்டும் ஒரு பழத்தைப் பிய்த்து வாயில் போட்டு மென்று சுவைத்தார். இப்படியாக எல்லா பழத்தையும் தான் ஒருவராகவே தின்று தீர்த்தார்.

திராட்சைப் பழம் வழங்கிய ஏழைக் கைம்பெண்ணுக்கு நன்றி கூறினார் சீடர்கள் முகத்தில் மாற்றம் ஏற்பட்டிருந்தது.

சீடர் ஒருவர் "நீங்கள் ஏன் தனியாகச் சாப்பிட்டீர்கள்? எங்களுக்கு ஒரு பழங்கூட தரவில்லையே... ஏன்?"

"அந்த திராட்சைப் பழம் மிகவும் புளிப்பாய் இருந்தது. எனவே, நான் ஒருவனாக அவற்றைத் தின்றேன்," என்றார் குரு.

"உங்களுடைய சுகத்திலும் துக்கத்திலும் நாங்கள் பங்கு கொண்டிருக்கிறோம். அப்படியிருக்க, சுவையற்றதை நீங்கள் தனியாக உண்ண வேண்டும் சுவை மிகுந்ததை மட்டும் எங்களோடு பகிர்ந்துண்ண வேண்டுமா? இது நீதியாகுமா?"

அவள் தந்த திராட்சைப் பழங்களை உங்களுடன் பகிர்ந்து கொண்டால், 'இந்தப் பழம் புளிக்கிறது" என்று நீங்கள் சாப்பிடும் போதே சொல்லி விமர்சனம் செய்து அந்தப் பெண்ணின் மனதைப் புண்படுத்திவிடுவீர்கள். அதனால் தான் திராட்சைப் பழங்களை உங்களுக்குத் தரவில்லை" என்று சொன்னார் முனிவர்.

எவருடைய மனதையும் புண்படுத்தக் கூடாது என்ற கருத்தில் தங்கள் குரு எத்தனை உண்மையாக இருக்கிறார் என்பதை அறிந்து மகிழ்ந்தனர் சீடர்கள்.

**- மற்றவர் மனதை புண்படுத்தும் செயல்களைச் செய்தல் ஆகாது -**



**(வரைந்த மாணவரின் பெயரைஅறியத் தரவும்)**





**சிந்திக்க.. ..**

குறை இல்லாதவன் மனிதன் இல்லை,
அதை குறைக்கத் தெரியாதவன்
மனிதனே இல்லை.

## குழந்தைகளின் உடல் ஆரோக்கியம்

உடற்பருமன் மற்றும் அளவுக்கதிகமான உடல் எடை ஆகியவை ஒரே அர்த்தம் தரக் கூடியவை. உடல் பருமன் உலக அளவில் குழந்தைகள் மற்றும் இளவயதினரிடம் பரவலாக அதிகரித்துள்ளது.




நமது முன்னோர்களின் "பொருளாதாரப் பெருக்கம்" (Thrifty Genotype) என்பதின்படி உணவு நமது அடிபோஸ் திசுக்களில் சேமிக்கப்பட்டு தேவைப்படும் போது ஆற்றல் அளிக்கிறது. எவ்வாறு உணவு சேமிக்கப்பட்டு பஞ்சத்தின் போது மக்களுக்கு வழங்கப்படுமோ அவ்வாறு. .

**ஆரோக்கியமற்ற உணவுப் பழக்கவழக்கங்கள்**

ஆடம்பரமான விளம்பரங்கள் மக்களை கவர்ந்து, விலை அதிகமான, ஆற்றல் அதிகம் தரும் உணவு, கொழுப்பு அதிகம் நிறைந்த உணவு, சாதாரண மாவுச்சத்து மற்றும் குறைந்த அளவு நார்ச்சத்து மற்றும் இதர கனிமச்சத்துகள் குறைந்த அளவு மட்டுமே தரும் உணவுப் பொருட்களை உண்ண வைக்கின்றனர். இது தவிர இனிப்பு மற்றும் கொழுப்பு அதிகமுள்ள உணவை உண்ணும் பழக்கம் அதிகரித்துள்ளது.

தொடரும்.. ..

**இவ்வுருவில் எத்தனை முக்கோணிகள் காணப்படுகின்றன?**



45 முக்கோணிகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஆரம்பப் பெறுமதி ரூ650 000 ஆகவுள்ள வாகனம் ஒன்று வருடந்தோறும் 1/5 பங்கினால் தேய்மானம் (குறைவு) அடைகிறது. 3 வருடங்களின் பின் இவ்வாகனத்தை வாங்கும் ஒருவர் நியாயமாகச் செலுத்த வேண்டிய விலை யாது?

02. ஒரு மாணவனுக்கு 0.75மீ சீருடைத் துணி வழங்கப்படுகிறதாயின், 42 மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான துணியின் மொத்த நீளத்தைக் காண்க.

03. பின்வருவனவற்றைப் பொருத்தமான உருக்கள் வரைந்து சுருக்குக.
1. $(2x-3)^2$ 2. $(3a+2b)^2$ 3. $(x+4)^2$

04. $3y - 9x^2 = 0$ எனும் சார்பின் வரைபை வரையாமல் பின்வருவனவற்றிற்கு விடை தருக.
1. சமச்சீர் அச்சின் சமன்பாடு 2. இழிவு அல்லது உயர்வு பெறுமானம்
3. திரும்பற் புள்ளியின் ஆள்கூறுகள்
4. இச் சார்பின் பிரதிவிம்பத்தின் இழிவு அல்லது உய்ர்வுப் பெறுமானம்

05. கூட்டல் விருத்தி ஒன்றின் முதலாம் உறுப்பு 2, 10 ஆம் உறுப்பு 38 ஆகும். இவ்வருத்தியின்,
1. பொது வித்தியாசம் 2. 15ஆம் உறுப்பு ஆகியவற்றைக் காண்க.

06. 199ஐ கிட்டிய பத்திற்கு மட்டம் தட்டுக.

07. 8 இனை விஞ்ஞான முறைக் குறிப்பீட்டில் எழுதுக.

08. 9, 19, 29, ..... எனும் தொடரில் அடுத்து வரும் இரு உறுப்புக்களையும் எழுதுக.

09. 14, 10, 6, ............ எனும் எண் தொடரின் பொது வித்தியாசத்தைக் காண்க.

10. x, x+4, x+8, ..................எனும் தொடரில் அடுத்து வரும் உறுப்பை எழுதுக.

11. பெறுமானம் காண்க. $8\frac{1}{2} + 4\frac{3}{4}$ 12. ரூ 820 இன் 1/5 எவ்வளவு?

13. 0.12 இனை சதவீதமாக தருக. 14. 0.32 இனை பின்னமாக தருக.

15. ஒரு நாளின் 1∴4 பங்கு எத்தனை மணித்தியாலங்கள்?

16. ரூ850 க்கு கொள்வனவு செய்யப்பட்ட பொருளை ரூ725 க்கு விற்றால் கிடைத்த இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு?

17. ஆண்டிற்கு 8% எளிய வட்டிக்கு ரூ100ஐக் கடனாகப் பெறும் ஒருவர் ஒரு வருட முடிவில் செலுத்த வேண்டிய தொகையைக் காண்க.

**கணிதம் வழிகாட்டல் :**
**திருமலையின் பிரபல ஆசிரியர்**


**MATHS**
Personal Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**T. Kumanan 0772975953**
**23. Sivan st Trinco.**
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
பரீட்சைக்குச் சகல மாணவர்களும் பங்குபெற்றலாம்.


## பாடம் : விஞ்ஞானம்

1. தற்கால உலகிலே அதிக அளவில் பயன்படுத்தப்படும் செயற்கைப் பெருள் பொலித்தீன் ஆகும். அதில் அடங்கியுள்ள மூலகங்கள் யாவை?
1. காபன், ஐதரசன் ஆகியன 2. காபன், ஐதரசன், ஒட்சிசன் ஆகியன
3. காபன், ஐதரசன், நைதரசன் ஆகியன
4. காபன், கந்தகம் ஆகியன

2. பொசுபரசு உள்ள வளமாக்கியாகப் பின்வரும் எந்தக் கனிப்பொருள் முக்கியத்துவம் வாய்ந்தது?
1. தொலமைற்று 2. மக்னெற்றைற்று 3. அப்பற்றைற்று
4. ஏமற்றைற்று

3. பின்வரும் மூலக்கூறுகளிடையே இரட்டைப் பிணைப்புள்ள மூலக்கூறு எது?
1. $Cl_2$ 2. $N_2$ 3. $O_2$ 4. $H_2$

4. நுண்ணங்கிகளினால் ஏற்படும் ஒரு பாதிப்பாக கருத முடியாதது எது?
1. நோய்களைத் தோற்றுவித்தல் 3. தோல் பதனிடல்
2. உணவைப் பழுதடையச் செய்தல் 4. தோல்நோய் ஏற்படல்

5. மின்காந்தம் பயன்படுத்தும் சந்தர்ப்பம் எது?
1. நுண்மின்னுடைப்பான்களில் 2. தொலைபேசி செவிபன்னியில்
3. மின் மணியில் 4. மேற்கூறிய மூன்றும் சரியானவை

6. முறையே ஓர் அமிலம், ஒரு மூலம், ஓர் உப்பு ஆகியன இடம்பெறும் விடை யாது?
1. $HCl, H_2SO_4, CuSO_4$ 2. $NaOH, NaHCO_3, CuSO_4$
3. $H_2SO_4, NaOH, Ca(OH)_2$ 4. $HCl, Ca(OH)_2, CuSO_4$

7. கைத்தொழில் ரீதியில் இரும்பைப் பிரித்தெடுப்பதற்கு இரும்புத் தாதைப் பெறுவதற்கு உகந்த இரும்புத் தாது படிவில் இருக்க வேண்டிய இயல்பாக அமையாதது எது?
1. நெடுங்காலத்திற்கு அதிக அளவில் பெறத்தக்கதாக இருத்தல்.
2. எளிதாக அடையத்தக்க ஓர் இடத்தில் இருத்தல்.
3. போதிய தூய்மையுடன் இருத்தல்.
4. கைத்தொழில் நகரத்தை அண்டியிருத்தல்.

8. திரவம் ஒன்றினுள்ளே இருக்கும் புள்ளி ஒன்றில் உள்ள அமுக்கத்திற் செல்வாக்குச் செலுத்தாத காரணி யாது?
1. திரவத்தின் அடர்த்தி 2. திரவத்தின் கனவளவு
3. ஈவையினாலான ஆர்முடுகல்
4. சுயாதீன மேற்பரப்பில் இருந்து அப்புள்ளியின் ஆழம்

9. தொற்றின் போது தின்குழியச் செயலின் மூலம் நுண்ணங்கிகளை அழிக்கும் குருதியிலுள்ள கூறு,
1. செங்குருதிச் சிறு துணிக்கைகள் 2. முதலுரு
3. வெண்குருதிச் சிறு துணிக்கைகள் 4. சிறுதட்டுக்கள்

10. எரிசோடாவாக இனங்காணப்படும் சேர்வையின் இரசாயனச் சூத்திரம் எது?
1. NaCl 2. NaOH 3. KOH 4. KCl

11, 50கிராம் $CaCO_3$ஐ வெப்பமேற்றும் போது கிடைக்கும் $CO_2$இன் திணிவு என்ன?
$(Ca=40, C=12, O=16)$
1. 44கி 2. 22கி 3. 56கி 4. 28கி

## பாடம் : வரலாறு

01. கோட்டை இராசதானி காலத்தில் இலங்கை வந்த ஒருவர் கேள்விப்பட்டிருக்கக் கூடிய விடயம்
அ – கடலாதெனிய , லங்காதிலக விகாரை அமைப்பு
ஆ – சப்புமல்குமாரய ஆரியசக்கரவர்த்திகளின் ஆதிக்கத்தை ஒழித்தல்
இ – வெஸ்ட வோல் உடன்படிக்கை இடம்பெறல்
ஈ - ஸ்பில்பேர்கன் இலங்கை வருகை
1. அ, இ, ஈ 2. ஆ, ஈ 3. இ, ஈ 4. ஈ, ஆ

02. முதலாம் உலக மகாயுத்தத்தில் ஐக்கிய அமெரிக்க பங்குபெறுவதற்கான உடனடிக்காரணம்
1. பாசிசவாதமும் நாசிசவாதமும் எழுச்சியடைந்தமை
2. ஹிட்லர் போலந்தை ஆக்கிரமித்தமை
3. நீர்மூழ்கிக் கப்பலின் மூலமாக லுசிதானியா கப்பல் தாக்குதலுக்குள்ளானமை
4. யப்பான், பேர்ள் துறைமுகத்தை தாக்கியமை

03. இயற்கை சிறுகுன்றை மூடுமாறு அமைக்கப்பட்ட பௌத்த விகாரை
1. பாமியன் 2. சுவெதகொன் 3. போரபுது 4. அங்கோருவார

04. ஐக்கிய நாடுகளின் சபையில் நிரந்தர உறுப்புகள் நாடுகளின் தொகை
1. 5 2. 15 3.193 4.10

05. ஆரியர் இந்தியாவில் குடியேறியமுதல் பிரதேசம்
1. சப்தசிந்து 2. கங்கைச்சமவெளி
3. விந்தியமலைத் தொடர் 4. இமாலயம்

06. இந்திய சுதந்திரபோராட்டத்தில் பஞ்சாப் சிங்கம் என வர்ணிக்கப்படும் தேசியவீரர்
1. லாலா லஜ்பதிராய் 2. தாதாபாய் நபுரோஜி
3. பாலகங்காதரதிலகர் 4. சுபாஸ் சந்திரபோஸ்

07. அ. மூன்றாவதுபௌத்தபேரவைமாநாட்டைக் கூட்டல்
ஆ. மகாயானபௌத்தத்தைசீனாவில் பரப்புதல்
இ. சாஞ்சி தூபிஉட்படபல தூபிகளைஅமைத்தல்
ஈ. நீலராஜன்,ஹஸ்திவர்மன் போன்றோரைதோற்கடித்தல்
மேற்படிவிடயங்களுள் மௌரியர் காலநிகழ்ச்சி
1. அ, ஆ 2. அ, இ 3. இ,ஈ 4. ஆ,ஈ

08. பண்டைய நீர்பாசன அமைப்பில் குளத்தின் பகுதியான கலிங்கல் தொட்டியால் ஆற்றப்பட்ட பணி
1. மேலதிக நீரை வெளியேற்றுதல்
2. குளக்கட்டை நீரரிப்பிலிருந்து பாதுகாப்பது
3. குளத்தில் சேரும் அடையல்,உக்கல்களை தடுத்தல்
4. கலிங்கல்லின் ஊடாக நீர் வெயியேறும் போது குளக்கட்டிற்கு ஏற்படும் அமுக்கத்தை குறைப்பது

**ஆசிரியர் : அகிலன்**



கடந்த வருடம் HISTORY ACADEMY யில் கல்வி கற்ற 77 மாணவர்களில் 58 மாணவர்கள் A பெறுபேற்றையும், 16 மாணவர்கள் B பெறுபேற்றையும், 03 மாணவர்கள் C பெறுபேற்றையும் பெற்றுத்தந்து எனது கல்வி நிலையத்துக்கு பெருமை சேர்த்தமைக்கு இம் மாணவச் செல்வங்களுக்கு எனது நன்றிகள்......

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அகத்தியர் ஸ்தாபனம்....

கங்குவேலி ஆலயத்தலைவர் திரு.வே.தவராஜா, அதிபர் அவர்களின் தலைமையில் கங்குவேலி சிவன் கோவில் முன்றலில் இருந்து இன்று 31ம் திகதி இந்த நடைப்பவனி நிகழ ஏற்பாடாகியுள்ள நிலையில் 29ம் திகதி இரவுவரை மூதூர் காவல்துறையின் அனுமதிக்காக சுமார் 5 மணித்தியாலங்களுக்கு மேல் காத்துக்கிடந்த அறுபது வயது மதிக்கத்தக்க மூதூர் இந்துக் குருமார் சங்கச் செயலரிடம் கங்குவேலி அகத்தியத் தாபனத்திற்கு பொதுமக்களோ ஏனைய இந்து அமைப்புக்களோ செல்வதற்கு அனுமதி வழங்கமுடியாது என காவல்துறை தெரிவித்துள்ளது. இந்துக் குருமார் பத்துப் பேர் மட்டுமே கங்குவேலி அகத்திய ஸ்தாபனத்திறகுள் உள் நுழைய முடியும் எனவும் சிவன் கோவிலில் கூட்டம் நடத்துவதற்கு எவ்வித தடைகளும் இல்லையென்றும் காவல்துறை தெரிவித்துள்ளது.

ஆனாலும் இத்தடையை நீக்குவதற்கு பல்வேறு தரப்புக்களுடன் மூதூர் இந்துக் குருமார் சங்கமும், மட்டக்களப்பு இந்து ஆலயங்களின் தலைமை ஒன்றியமும் பல்வேறு தரப்புக்களுடனும் பேச்சுக்களில் ஈடுபட்டுள்ளன. இந் நடைப்பவனியில் அனைத்து இந்துக்களையும் கலந்து சிறப்பிக்குமாறு ஏற்பாட்டாளர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். தமிழரின் இரண்டாவது பண்பாட்டுப் பல்கலைக்கழகமாக இயங்கிய கங்குவேலி அகத்தியர் ஸ்தாபனம் தந்தையர்க்குத் தனயன்களால் பிதிர்கடன் செலுத்தவும் பிரசித்தமானது. அத்துடன் புராண வரலாறுகளின்படி இராவணேசனுக்கு சிவனால் வழங்கியருளப்பட்ட போர்வாளை அகத்தியமாமுனி இவ்விடத்தில் வைத்தே இராவணனுக்கு கையளித்தார் என்றும் கூறப்பட்டுள்ளது.

## எங்களின் தீர்வுக்கு...

தமிழக முதல்வர் ஜெயலலிதாவுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய நாடாளுமன்றத் தேர்தலில் தமிழக முதல்வர் ஜெயலலிதா, தமிழ்நாட்டில் ஈட்டிய பெரு வெற்றியைப் பாராட்டி அவருக்கு அனுப்பி வைத்த கடிதத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை அரசினால் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் பல. அவை துரதிஸ்டவசமாக நிறைவு செய்யப்படவேயில்லை எனத் தெரிவித்துள்ளதுடன் இந்திய பிரதமர் மோடிக்கு அனுப்பப்பட்ட கடிதத்தின் பிரதியையும் இணைத்து அக்கடித்தில் தெரிவித்துள்ள விடயங்களையும் குறிப்பாகச் சொல்லியுள்ளார். அவ்விபரங்கள் வருமாறு:

01. தேசியப் பிரச்சினைக்கு ஏற்றுக்கொள்ளத்தக்க அரசியல் தீர்வு ஒன்றைக் கொண்டு வருவோம் என சர்வதேச சமூகத்திற்கும், இந்தியாவுக்கும் ஏற்கனவே பல தடவைகள் தான் வழங்கிய உறுதிமொழியை இலங்கை அரசு நிறைவு செய்யவேயில்லை.

02. அந்தக் கடிதத்தில் நாம் விலாவாரியாகக் குறிப்பிட்டவாறு தனது பல்வேறு செயற்பாடுகள் மூலம் வடக்கு, கிழக்கில் தமிழ்ப் பேசும் மக்கள் பெரும்பான்மையினராக வாழும் பிரதேசங்களின் இனப்பரம்பல் முறையை மோசமாக மாற்றியமைக்கவும், அதன் மூலம் அவர்களின் இனத்துவ, மொழியியல், பண்பாட்டு அடையாளங்களை சீரழிக்கவுமான நிகழ்ச்சி நிரலையே இலங்கை அரசு முனைப்பாக முன்னெடுக்கிறது.

03. இலங்கை அரசாங்கத்தின் மேற்படி நடவடிக்கைகள், ஏற்றுக்கொள்ளத்தக்க ஓர் அரசியல் தீர்வை எட்டுவதில் இலங்கை அரசுக்கு நேர்மையான பற்றுறுதி இல்லை என்பதைத் தெளிவாகப் புலப்படுத்துகின்றன.

இலங்கை அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடுகள் நல்லிணக்கம், நிரந்தர சமாதானம், அமைதி ஆகியவற்றுக்கான முயற்சிகளைப் பலவீனப்படுத்தும், மோதல் நிலையைத் தீவிரப்படுத்துகின்ற சூழலை உருவாக்கும், மேலும் தமிழ்ப் பேசும் மக்களுக்கு, அவர்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் பிரதேசங் களில் மீளச் சரிபண்ணவே முடியாத பல இழப்புக்களை ஏற்படுத்தும்.

இலங்கையில் நீதி மற்றும் சமத்துவத்தின் அடிப்படையிலான கௌரவமான தீர்வு ஒன்று எட்டப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு இந்தியாவின் பங்களிப்புத் தொடரவேண்டும் என்று பிரதமரிடம் நாம் கோரியுள்ளோம். இதனை எட்டுவதற்கு உங்களின் முழு ஆதரவு தொடர்ந்து அவசியம் என்று தங்களை வேண்டி நிற்கிறோம். இயன்றளவில் விரைவில் தங்களைச் சந்திக்க எதிர்பார்த்திருக்கிறோம். அத்தகைய வாய்ப்பை எமக்கு வழங்குமாறு ஆர்வத்துடன் வேண்டுகிறோம்.

## இளந்திரையனின்....

மட்டக்களப்பு திருப்பழுகாமத்தைச் சேர்ந்தவரும் சிவானந்தா தேசிய பாடசாலையின் பழைய மாணவருமாகிய இளந்திரையன் ஆறுமுகம் அவுஸ்திரேலியாவில் " Q " எனும் குறுந்திரைப்படம் ஒன்றினை இயக்கியுள்ளார்.

கடந்த காலங்களில் இந்திய சினிமாவில் பணியாற்றிய இவர் முதன் முறையாக வரலாற்றுக் கலைஞர்களை உள்ளடக்கிய இப்படத்தினை இயக்கியுள்ளதுடன், இப்படமானது 17 இற்கு மேற்பட்ட உலகளாவிய திரைப்பட விருது விழாக்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதுடன், உலக சினிமா அளவுகோல்களுக்கு ஏற்றால் போல் இத் திரைப்படத்தின் கதையினையும் அமைத்திருக்கின்றார்.

இப்படத்தினுடைய (Trailor) பின் இணைப்பு காட்சிகள் கடந்த 27ம் திகதி செவ்வாய்க்கிழமை உத்தியோகபூர்வமாக வெளியாகியுள்ளதுடன், இதன் முழு திரைப்பட காட்சிகள் எதிர்வரும் ஆனி மாத இறுதியில் வெளிவரவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## பாகுபடுத்திப் பார்க்கும்...

மூலம்பொதுமக்களிடம் இருந்த தான் பெற்றுள்ளதாகவும் தெரிவித்தார். மேலும் அக்கறையீனமாக நிரப்பட்ட நோயாளர் அட்டையில் திகதியை மாதம்மொன்றிற்கு முன் போட்ட படியால் அந் நோயாளியைக் கொழும்பிற்கு அவசரவண்டி மூலம் அனுப்பியும் கொழும்பு வைத்தியசாலை அவரை ஏற்கமறுத்துத் திருப்பியனுப்பிய சம்பவம் நடைபெற்றுள்ளது என்றும் அவர் குறித்துக்காட்டியுள்ளார். அதேவேளை இவ்விடயம் தொடர்பாக குற்றச்சாட்டை முன்வைத்த மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற ஊறுப்பினர் பொன். செல்வராசா வெளிநோயாளர் பிரிவில் ஐந்து மணித்தியாலங்களுக்கு மேல் காத்திருந்தும் மருந்து கிடைக்காமல் வீடு திரும்பும் நோயாளர்கள் இருக்கின்றனர் எனத் தெரிவித்ததுடன் அண்மையில் கண் சத்திரசிகிச்சைக்குட்படுத்தப்பட்ட வயதானவர் மாடியிலிருந்து தவறிக் கீழே விழுந்து மரணித்ததையும் குறிப்பிட்டார்.

இக்குற்றச்சாட்டுக்கள் தொடர்பாகத் தனது விளக்கத்தை அளித்த வைத்தியசாலைப்பணிப்பாளர் வைத்திய கலாநிதி எம்.எஸ்.இப்ராஹிம் தான் அப்பதவியை ஏற்றுக் குறுகிய காலமே சென்றிருப்பதால் இவ்விடயம் தொடர்பாகக் கவனம் செலுத்துவதாகவும் தேவையேற்படின் நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

## ஆசிரியர் சங்கம்...

நடவடிக்கை எடுப்பதும் அவ்வாறு நடவடிக்கை எடுக்கும் போது ஏற்கனவே அம்மட்டங்களில் பணியாற்றும் ஆசிரிய சேவையைச் சேர்ந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்குவதும், ஆசிரிய இடமாற்றங்களின் போது ஆசிரியர்களைப் பாதிக்காத வண்ணம் நடவடிக்கைகளை முன்னெடுப்பதும், ஆசிரிய ஆலோசகர்களின் நியமனங்களின் போது தனிப்பட்ட செல்வாக்குகளுக்கு முன்னுரிமை கொடுக்காது சேவைமூப்பு, கல்வித்தகைமை போன்ற விடயங்களை கருத்திற்கொண்டு பொதுவான நடைமுறையினை அவ் ஆசிரிய ஆலோசகர் நியமனங்களில் பின்பற்றுவது தொடர்பாகவும், வேலைநாட்களுக்கு மேலதிகமாக விடுமுறை நாட்களிலும் ஆசிரியர்களை வீட்டிலோ அல்லது பாடசாலையிலோ கடமைகளை மேற்கொள்ள நிர்ப்பந்திப்பதைத் தவிர்ப்பதும்,தேசிய கல்விப் பாடவிதானத்தை ஆசிரியர்கள் பின்பற்றுவதற்கு இடையூறு செய்யும் அரச, அரசுசாரா அமைப்புக்களால் முன்வைக்கப்படும் ஏனைய திட்டமொழிவுகளை அமுலாக்கம் செய்யும் போது ஆசிரியர்களின் கருத்துக்களை உள்வாங்குவது தொடர்பாகவும், பாடசாலைகளால் சேர்க்கப்படும் நிதிவிடயங்களை நிர்வகிப்பது மற்றும் ஆலோசனைகளை வழங்குவதற்குப் பொருத்தமான அதிகாரி ஒருவரை நியமிப்பதும், ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பிரத்தியேகக் கல்வி நடவடிக்கைகளை நிறுத்தி மாணவர்களை அறநெறி விடயங்களில் கருத்தூன்றச் செய்வதும் தொடர்பாக ஆராயப்பட்டதாக இலங்கை ஆசிரியர் சங்கச் செயலர் மலைமுரசிற்குத் தெரிவித்தார்.

## கிழக்கிலும் வடக்கிலும்...

ஏற்றுக்கொள்ளாத அரசாங்கம் போர்க் காலத்தில் இருந்தது போலவே ஒரு இராணுவ ஆட்சியையே வடக்கு கிழக்கில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

கடந்த வடமாகாண சபை தேர்தலில் தமிழ் மக்கள் தமது உச்சகட்ட ஜனநாயக தீர்ப்பை எழுதிய பின்பும் அரசாங்கம் தனது தான்தோன்றித்தனமான செயல்களிலேயே ஈடுபட்டுவருகின்றது.

வடமாகாண சபையின் நிர்வாகங்களில்......இராணுவம் தலையிட்டுவருகின்றது. இதன் காரணமாக தமிழர்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள் மதிப்பற்றவர்களாக அவமதிக்கப்படுகின்றார்கள்.

அண்மைக்காலமாக இராணுவத்தால் செய்யப்பட்டுவரும் சுற்றிவளைப்புகள் கைதுகள் என்பவற்றுக்கு மாகாணசபை உறுப்பினர்களும் உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளது. வட மாகாணசபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளையின் கிளிநொச்சி திருநகரில் அமைந்துள்ள வீடு இராணுவத்தால் நேற்று புதன்கிழமை (28) அதிகாலை முதல் முற்றுகைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளது.

வடமாகாண சபை உறுப்பினர் எனத்தெரிந்தும் அவரின் அடிப்படை உரிமைகள் இராணுவத்தால் மீறப்பட்டிருகின்றது. இதுபோல அமைச்சர் ஜங்கரநேசனுக்கும் சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது. மக்களால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கே இந்தநிலை என்றால் சாதாரண தமிழ் குடிமக்களுக்கு என்ன இங்கு நேர்கின்றது என்பதை சர்வதேசம் மிகவும் கவனத்தில் கொள்ள வேண்டிய தேவையான சூழல் தமிழர் வாழும் பகுதிகளில் தற்போது நிலவுகின்றது.

முழுமையான ஜனநாயக மறுப்புச் சூழலுக்குள் இலங்கையில் தமிழர்கள் வாழும் வடக்கு கிழக்கை இராணுவம் உட்படுத்தி வருகின்றது. இது கண்டனத்திற்குரியது. தமிழர்கள் தற்போது முழுமையாக தமது நிம்மதியை இழந்திருக்கின்றார்கள். அவர்களின் அடிப்படை சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. எப்போதும் வீடுகள் சுற்றிவளைக்கப்படலாம் எவரும் எப்போதும் கைது செய்யப்படலாம் என்ற நிலையில் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றார்கள்.

வடக்கு கிழக்கு முழுமையான இராணுவ மயமாக்கலுக்குள் சென்றுகொண்டிருப்பதை சர்வதேச சமூகம் கவனத்தில் எடுத்து இலங்கையின் வடக்கு கிழக்கில் தமிழர்கள் உரிமைகளுடன் கூடிய அமைதியான சுதந்திரமான வாழ்வு வாழ வழி அமைக்கவேண்டுமெனவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அனல் மின்நிலையம்...

நாடுகளாலும் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படாதுள்ளது.

250 மெகாவாட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யவுள்ள இந்த அனல் மின்சார நிலையம் 2018 ம் ஆண்டளவில் தமது மின் பிறப்பாக்கப் பணிகளை ஆரம்பிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

## நாட்டாரியல் ஆற்றுகை...

கிழக்குப் பல்கலைக்கழக திருகோணமலை வளாகத்தில் தொடர்பாடல்துறை மாணவர்கள், தமது கற்கைகளின் ஒரு பகுதியாக நாட்டாரியல் கலை வெளிப்பாடுகளை பொதுமக்கள் முன் நிகழ்த்திக் காட்டினர்.

கடந்த 27.05.2014 அன்று மாலை திருகோணமலை நகரப்பகுதியில் நடைபெற்ற இந்த நிகழ்த்துகைகள், மூன்று மொழிகளிலும் மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கல்விப்புலத்தில் பிரத்தியேக வகுப்புக்கள் மூலம் தமது சிறுபராய மகிழ்ச்சியைத் தொலைக்கும் சிறுவர்கள், தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் தனிமனித ஆளுமையில் உருவாக்கும் உளப்பாதிப்புக்கள், சீதன முறைமையினால் உருவாகும் குடும்பச் சிக்கல்கள் ஆகியன இந்த வீதி நாடகங்களின் கருப்பொருட்களாக இருந்தன. தொடர்பாடல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி சி.ரகுராமின் வழிநடத்தலில், விரிவுரையாளர்கள் சிவப்பிரியா சக்திலிங்கம், ஷாலிகா போயாகொட, நிசன்சலா ஜெயவர்த்தன ஆகியோர் இந்த நிகழ்வுகளை அமைத்திருந்தனர்.

ஏற்கனவே விவரணப்படத் தயாரிப்புக்களிலும் குறும்பட உருவாக்கங்களிலும் தமது பட்டப்படிப்பில் பயிற்சிபெறும் இம்மாணவர்கள், கடந்த சில வருடங்களில் மாத்திரம் சமூகப் பிரச்சினைகளை மையமாகக்கொண்ட சுமார் 200 விவரணப்படங்களையும், 100 குறும்படங்களையும் உருவாக்கியிருப்பதோடு அவற்றில் சில சர்வதேச, தேசிய மட்டங்களில் விருதுகளைப் பெற்றறிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

நன்றி (அத தெரண)

## 6 மணிக்குப் பின்...

கொண்டுவந்ததாகவும், மாணவர்களின் நலன்கருதியே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப் பட்டுள்ளதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த தீர்மானத்தை மீறும் கல்வி நிலையங்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களை இரத்துசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக திருகோணமலை நகர சபை அறிவித்துள்ளது.

## மெதடிஸ்த் மத்திய கல்லூரி...

கல்லூரியின் அதிபர் பயஸ் ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் பாடசாலையின் பழைய மாணவர்களான மட்டக்களப்பு மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.கிறிதரன், மட்டக்களப்பு வலய கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன், மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, பா.அரியநேத்திரன், அருட் தந்தை கிறைட்டன் அவுட்ஸ்கோன், மட்டக்களப்பு மாநகர ஆணையாளர் எம்.உதயகுமார், ஜனாதிபதியின் மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் அருண் தம்பிமுத்து உட்பட சமய பிரமுகர்கள், முக்கியஸ்த்தர்கள், கல்வியலாளர்கள் கலந்துகொண்டனர்.

இதன்போது காந்தி பூங்காவில் பல்வேறு நிகழ்வுகள் நடைபெற்றதுடன் வாகன ஊர்தியில் அதிதிகள் கையொப்பம் இடும் நிகழ்வும் இடம்பெற்றது.

வாகன பவணி மட்டக்களப்பு - திருமலை வீதியூடாக திருகோணமலைக்கு சென்று, நாளை வெள்ளிக்கிழமை கல்முனை நோக்கிச்சென்று அங்கிருந்து சனிக்கிழமை பொத்துவில் வரைக்கும் செல்லவுள்ளது.

இந்த நிகழ்வினை தொடர்ந்து 200வது ஆண்டினை குறிக்கும் வகையில் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளன.

## பாடசாலைக் கண்காட்சி...

பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு 140 வருடங்கள் நிறைவடைகின்றமையைச் சிறப்பிக்கும் முகமாக இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிபர் திருமதி சி.எஸ்.மாசிலாமணி தெரிவித்தார்.

துரதிஸ்டவசமாக 94ஆம் ஆண்டு நடத்தப்பட்ட கண்காட்சிக்குப்பின்னர் இந்த வருடமே இக்கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இது தொடர்ந்து நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.

அதே நேரம், ஒவ்வொரு பாடத்துறைக்கும் காட்சிக் கூடங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. வங்கிகள், மீன்பிடித்திணைக்களங்கள் உள்ளிட்ட திணைக்களங்களும் காட்சிக்கூடங்களை நிறுவவுள்ளன. மொத்தமாக 80 காட்சிக்கூடங்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன் அனைத்து மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள் இணைந்து முழுமையான ஏற்பாடுகள் நடைபெற்று வருவதாக பிரதி அதிபரும் கண்காட்சி இணைப்பாளருமான இரத்தினசிங்கம் பெஸ்லியோவான் தெரிவித்தார்.


புனித மிக்கேல் கல்லூரி 2600 மாணவர்களையும், 125 ஆசிரியர்களையும் கொண்ட கிறிஸ்தவ பாதிரிமார்களின் தீவிர செயற்பாடுகளுக்குள் இருந்து முன்னேற்றத்துடன் செயற்பட்டுவரும் தேசியப்பாடசாலையாகும்.

**உண்மையை உலகுக்குச்
சொல்லக் கூடிய
பத்திரிகையாளர்கள்
தேவை - 075 4252042**




# பரா அத் இரவு என்பது!!!

ஷ'.பான் மாதம் 15ம் பிறை 'பராஅத் இரவு' என்று அனுஷ்டிக்கப்பட்டு இல்லாத பொல்லாத பல காரியங்கள் இன்று மார்க்கம் என்ற பெயரில் அப்பாவி முஸ்லிம்களுக்கு மத்தியில் அமல்படுத்தப்பட்டு வருகின்றது. இந்த 'பராஅத் இரவு' என்றால் என்ன? இதனுடைய உண்மை நிலை என்ன?



நபி(ஸல்) அவர்கள் ஷ'.பான் முழுவதும் நோன்பு நோற்பார்கள் என்று சொல்கிற அளவுக்கு ஷ'.பானின் மிக அதிகமான நாட்கள் நோன்பு நோற்பார்கள் என்று ஆயிஷா(ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நூல் : புகாரி

இவ்வாறாக ஷரீஅத்தில் ஷ'.பான் மாதத்திற்கு சிறப்பு சொல்லப்பட்டதை வைத்து இந்த சிறப்பு விஷயத்தில் மக்களை ஆர்வப்படுத்த வேண்டும் என்பதற்காக அல்லாஹ்வோ அவனின் தூதரோ சொல்லாத பல பொய்யான தகவல்களை மார்க்கத்தின் பெயரால் பரப்புவதை ஒருபோதும் ஒரு முஸ்லிமால் தாங்கவோ, ஜீரணிக்கவோ இயலாது.

மேலும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்: ஷ'.பான் மாதத்தின் நடுபாதி வந்துவிட்டால் ரமளான் மாதத்தை அடைகின்றவரை நீங்கள் நோன்பு வைக்க வேண்டாம். நூல் : திர்மிதி, இப்னுமாஜா

தொடரும் ...

# செஞ்சிலுவை இயக்கத்தின் வரலாறு

பாகம் : 05

இச் சின்னம் அணிந்துள்ளவர்களைத் தாக்கக்கூடாது.

இம் மனிதாபிமானத் தொண்டர் சேவையினை மேற்கொண்டுள்ள இவ் இயக்கத்தின் பணிகளை சகல நாட்டிலுமுள்ள மக்களுக்கும் கிடைக்கச் செய்ய வேண்டும் என்ற நோக்கோடு ஒவ்வொரு நாட்டுக்கும் ஒரு தேசிய செஞ்சிலுவைச் சங்கத்தினை உருவாக்க இச் சர்வதேச செஞ்சிலுவைக் குழு பாடுபட்டது. அதன் பின் ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த நாட்டுக்கான தேசிய சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டன.

அவ்வாறு தோற்றுவிக்கப்பட்ட நாடுகளின் தேசிய சங்கங்களை வழிநடாத்த ஒரு தாய்ச் சங்கம் ஒன்று தேவை என்பதனைக் கருத்திற் கொண்டு 1919ம் ஆண்டு "செஞ்சிலுவைச் சங்கங்களின் லீக்" (League of the Red Cross Societies) என்ற பெயருடன் தேசிய சங்கங்களுக்கான தாய்ச் சங்கம் தோற்றுவிக்கப்பட்டது. இத் தாய்ச் சங்கத்தில் சகல தேசிய செஞ்சிலுவைச் சங்கங்களும் அங்கத்துவம் பெற்றுக் கொண்டன.

முதலில் போர்க்காலங்களில் காயமுறும் போராளிகளுக்கு உதவும் நோக்குடன் முதலாவது ஜெனீவா சாசனம் அங்கீகரிக்கப்பட்டது. அப்போது தான் சர்வதேச காயமுற்ற போராளிகளுக்கு உதவும் குழு உதயமானது. இதன் பின் போரின் போது கைது செய்யப்படும் கைதிகளுக்கு உதவும் வகையில் 1929ல் மற்றுமொரு ஜெனீவா உடன்படிக்கை அங்கீகரிக்கப்பட்டது. அக்காலத்தில்தான் தேசிய செஞ்சிலுவைச் சங்கங்கள் சிலவற்றின் வேண்டுகோளுக்கிணங்க செஞ்சிலுவைச் சின்னத்துடன் மேலும் மூன்று சின்னங்கள் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டன.

செம்பிறை, செஞ்சிங்கமும் செஞ்சூரியனும் போன்ற சின்னங்களும் அங்கீகரிக்கப் பட்டன அந்தந்த நாட்டினரின் வேண்டுகோளுக்கிணங்க அந் நாடுகளின் தேசிய சங்கங்கள் விரும்பியவாறு அங்கீகரிக்கப்பட்ட சின்னங்களைப் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது.



இவ்வாறு செஞ்சிலுவைச் சங்கங்களின் வளர்ச்சிக் காலங்களில் ஒவ்வொரு படி எடுத்து வைக்கும் போது ஒவ்வொரு உடன்படிக்கை அங்கீகாரம் பெற்றுக் கொண்டு தான் தனது மனிதாபிமானப் பணியினை இச் செஞ்சிலுவைச் சங்கம் முன்னெடுத்துக் கொண்டு சென்றது. இறுதியாக 1949ல் சர்வதேசச் செஞ்சிலுவைக் குழு நான்காவது ஜெனீவா உடன்படிக்கையினை அங்கீகரித்தது.

டாக்டர் என்.ரவிச்சந்திரன்
கிளை நிறைவேற்று அதிகாரி
திருகோணமலை கிளை, இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்




# தக்காளிப்பழ அல்வா



**தேவையான பொருட்கள்**

தக்காளிப்பழம் - கால் கிலோ, கோதுமை மாவு - 150 கிராம், சர்க்கரை - 300 கிராம், தேங்காய்த் துருவல் - கால் தம்ளர், முந்திரி பருப்பு - 8, கிஸ்மிஸ் - 25, ஏலக்காய் பொடி - கால் தேக்கரண்டி, நெய் - 100 மில்லி லிட்டர்

**செய்முறை**

தக்காளிப்பழத்தை நன்கு கழுவி, சுத்தம் செய்து தண்ணீர் விட்டு அவித்தெடுக்கவும். பின்னர் அதன் மேல் தோலை உரித்து சதைப் பாகத்தை நன்கு கையால் பிசைந்து விதைகளை நீக்கக்கொள்ளவும். பின்னர் மிக்சியிலிட்டு நன்கு அடித்து எடுக்கவும். இதனை தக்காளி விழுது. தேங்காய்த்துருவலுடன் சிறிது தண்ணீர் சேர்த்து பிழிந்து மூன்று முறையாக பால் எடுத்து வைக்கவும்.



முந்திரி பருப்பை பொடியாக்கி கிஸ்மிஸ் சேர்த்து சிறிது நெய்யில் வறுத்துக்கொள்ளவும். மூன்று தம்ளர் தண்ணீருடன் கோதுமை மாவைச் சேர்த்து, நன்கு கலந்து அடிகனமுள்ள பாத்திரத்தில் ஊற்றி நன்கு கிளறவும். ( விருப்பமான கலரிங் ஐயம் சேர்த்துக் கொள்ளலாம்.) தீயை நிதானமாக எரியவிடவும். அரைப் பதம் வந்ததும் தக்காளி விழுது தேங்காய்ப்பால், சர்க்கரை சேர்த்து கைவிடாமல் கிளறிக் கொடுக்கவும். இடை இடையே நெய்யை ஊற்றவும்.

அல்வா பதம் வந்ததும், வறுத்த முந்திரி, கிஸ்மிஸ், ஏலப்பொடி சேர்த்து இறக்கவும். ஒரு தாம்பாளத்தில் பரவலாக வைத்து தேவைக்கு ஏற்பதுண்டுகள் ஆக்கவும்.

# தே.பாலின் தேவை



தேங்காய்ப் பால், உடல் வலிமைக்கு நல்லது. தேங்காய் எண்ணெய் சித்த மருத்துவத்தில் பல்வேறு மருந்துகளில் சேர்க்கப்படுகிறது. தேங்காய் எண்ணெய்யைத் தடவி வந்தால் தீப்புண்கள் விரைவில் குணமாகும். கூந்தல் வளர்ச்சிக்கு தேங்காய் எண்ணெய் சிறந்த டானிக். தேமல், படை, சிரங்கு போன்ற நோய்களுக்குத் தயாரிக்கப்படும் மருந்துகளில் பெருமளவு தேங்காய் எண்ணெய் சேர்க்கப்படுகிறது. மாதவிலக்கின் போது ஏற்படும் அதிக உதிரப்போக்குக்கு, தென்னை மரத்தின் வேரிலிருந்து எடுக்கப்படும் சாறு நல்ல மருந்து. வெள்ளைபடுதலுக்கு தென்னம் பூ மருந்தாகப் பயன்படுத்தப்படுகிறது. தேங்காய் எண்ணெய் தயாரிக்கும்போது கிடைக்கும் புண்ணாக்கோடு கருஞ்சீரகத்தைச் சேர்த்து, தோல் நோய்களுக்கான மருந்துகள் தயாரிக்கப்படுகின்றன.

முற்றும் .. ..

# மனைவியை மயக்குவது எப்படி

மனைவியை மயக்குவது எப்படி? கல்யாணம் ஆயி பல வருசம் ஆச்சு. இன்னும் வண்டி மக்கர் பண்ணுதே என்று மனசுக்குள்ளே ஏக்கமா?

கவலையே வேண்டாம்! சின்னச் சின்ன திருட்டு வேலைகளை செய்தாலே போதும்!! பூதத்தை பூட்டியில் அடைச்ச அலாவுதீன் கணக்கா ஆயிடலாம்!!

மகளிர் வண்டியில் நாங்க மறந்தும் ஏறினா பிண்ணிட்ரீங்க இல்ல. அதுபோல இது அப்பாவி அப்பாக்களுக்கு மட்டும்!

1. வீடு திரும்பும்போது ஒரு போனைப்போட்டு "உனக்கு அல்வா புடிக்குமே இன்னைக்கு வாங்கிக்கிட்டு வரவா?"ன்னு கேளுங்க, "செலவு எதுக்கு? வேணாம்ன்னுதான் பதில் வரும்!"

2. மனைவின்னாலே குண்டுன்னுதான் அர்த்தம்! அதை சுட்டிக்காட்டாம இருக்கவும் முடியாது! அப்படிப்பண்ணும்போது அது நக்கலில் போய் முடியும். அப்படியில்லாமல் "இந்த சேலையில நீ குண்டாவே தெரியலியே", "அந்த காம்பாக்ட் பவுடர் போட்ட கண் கருவளையம் தெரியவே இல்லை" இப்படிச் சொல்லணும்!

3. ஒருநாள் சாயங்காலம் முழுக்க டி.வி. ரிமோட் அம்மிணி வசம் கொடுத்து விட்டு அவங்க விருப்பப்பட்ட சீரியல்களை பல்லைக் கடித்துக்கொண்டு பார்க்கவும்..



4. வீட்டு நாயைப் புடிச்சு தண்ணி ஊத்தி குளிப்பாட்டிவிடுங்க. அம்மிணி வண்டியை கொஞ்சம் துடைத்து பளபளப்பாகி விடுங்க.

5. ஞாயிறு போன்ற விடுமுறையில் அப்படியே ஒரு சுத்து. நோ சமையல்.. ஜாலிதான் அப்புறம்!

6. குற்றம் கண்டுபிடித்து தொல்லை செய்வதை கொஞ்சம் தவிருங்கள். உங்களிடம் இருக்கும் குறைகளையும் கொஞ்சம் எண்ணிப்பார்க்கவும்!

இவ்வாறெல்லாம் செய்தீர்களானால் வீடு இன்னும் அதிகமான சொர்க்கமாகத் தெரியும்.




# குருப் பெயர்ச்சி (13.06.2014 - 05.07.2015)

*குரு பகவான் வரும் ஜய வருடம் வைகாசி மாதம் 30 ஆம் நாள் 13.06.2014 மாலை 06.03 மணிக்கு மிதுன ராசியில் இருந்து கடக ராசிக்கு மாறுதலாக உள்ளார். 05.07.2015 வரை கடக ராசியில் சஞ்சாரம் செய்யவுள்ள[illegible]வான் கடக ராசியில் சஞ்சரிக்கவுள்ளதால் 12 ராசிகளுக்கும் உண்டாக்கக் கூடிய பலா பலன்கள். இவை பொதுவான பலன்களே!*



## தனுசு

ம்பீரமான தோற்றமும் சிறந்த தெய்வ பக்தியும், எதிலும் மிகுந்த தைரியத்துடன் செயல்படும் உங்களுக்கு இம்முறை குரு மாற்றம் அவ்வளவு சாதகமான அமைப்பு என்று கூற முடியாது.

உடல் ஆரோக்கியத்தில் அடிக்கடி பாதிப்புக்கள் ஏற்படும். பொருளாதார நிலை தேவைக்கேற்ற படி காணப்படும். பணக் கொடுக்கல் வாங்கலில் மிகுந்த கவனம் தேவை. தொழில் வியாபாரம் செய்பவர்கள் சற்று போட்டிகளை எதிர்கொண்டே முன்னேற்றம் அடைய முடியும். தேவையற்ற அலைச்சல்கள் உருவாகலாம். முற்பாதி காலம் சிறிது சாதகமான காலமெனினும் பிற்பகுதியில் உடல் ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை.

கல்வியில் சற்று மந்தமான நிலை உருவாகும். வேலைப் பளு அதிகம் இருந்தாலும் உடனிருப்பவர்களின் ஒத்துழைப்பு மிகவும் உதவியாக இருக்கும். கணவன், மனைவிக்கிடையில் சிறு சிறு கருத்து வேறுபாடுகள் ஏற்படலாம்.

ஆடம்பர செலவுகளைக் குறைப்பது நல்லம். சுப காரிய முயற்சிகள் தடைப்படலாம். டிசம்பரிற்குப் பின்னர் சற்று சுமூகமான சூழ்நிலை உருவாகும். அதிர்ஷ்ட நிறங்கள் மஞ்சள், பச்சை.




## மகரம்

எதிலும் போராடி வெற்றி பெறக் கூடிய ஆற்றலும் தன்னம்பிக்கையும் தைரியமும் கொண்ட மகர ராசி அன்பர்களுக்கு அற்புதமான பலனை தரும் காலமாகும்.

பணவரவுகளுக்கு பஞ்சம் இருக்காது. கடன்கள் அனைத்தும் குறையும். தடைப்பட்டுக் கொண்டிருந்த சுப காரியங்கள் கைகூடி வரும். சிலருக்கு அசையும் அசையா சொத்துக்கள் வாங்கும் யோகம் உள்ளது. செய்யும் தொழில் மற்றும் வியாபாரத்தில் இலாபம் பெருகும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பார்த்த இடமாற்றம் கிடைக்கப்பெறும்.

உடல் ஆரோக்கியம் மிகச் சிறப்பானதாக இருக்கும். கல்வியில் முன்னேற்றமான நிலை உருவாகும். லாட்டரி, ஷேர் போன்றவற்றில் முதலிடுவதன் மூலம் நிறைய இலாபம் அனுபவிக்கலாம்.

பூர்வீக சொத்துக்களால் பலன் கிட்டும். தெய்வ தரிசனங்களை மேற்கொள்வதற்காக குடும்பத்துடன் பயணம் மேற்கொள்ளும் வாய்ப்புக்கள் உருவாகும்.

டிசம்பர் மாதமளவில் உடல் ஆரோக்கியத்தில் சிறு பாதிப்பு ஏற்படும். டிசம்பர் முதல் ஏப்ரல் வரை பொருளாதார நெருக்கடி உருவாகலாம். அதிர்ஷ்ட நிறங்கள் நீலம் மற்றும் பச்சை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21வதுபொன்அணிகளின் சமரை battle of the Golds மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலயம் 3 விக்கட்டுக்களால் வெற்றி கொண்டுள்ளது. செவ்வாய்க்கிழமை 27.05.2014 இப்போட்டி திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.




# பொன் அணிகளின் சமர்

1993ம் வருடம் இப்போட்டி தொடர் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது வரை நடைபெற்ற போட்டிகளில் 12 தடவைகள் திருகோர்ணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியினரும், 9 தடவைகள் மட்டக்களப்பு சிவானந்தா வித்தியாலய அணியினரும் வெற்றி பெற்றுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை 27.05.2014 நடைபெற்ற 21வது போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணியினர் 41.3. பந்து பரிமாற்றங்களில் சகல விக்கட்டுக்களையும் இழந்து 119 ஓட்டங்களைப் பெற்றனர். பே.பானுசாந் 22, சி.அகில்ராஜ் 18, ரா.ராசித் 14, செ.திவாகரன் 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் சிவானந்தா வித்தியாலயத்தின் சார்பில் வை.சசிகரன் 23 ஓட்டங்களுக்கு 4 இலக்குகளைத் தகர்த்தார்.

120 என்ற இலக்கோடு களம் புகுந்த சிவானந்தா வித்தியாலய அணியினர் 32.1 பந்து பரிமாற்றங்களில் 7 இலக்குகளை இழந்து 122 ஓட்டங்களைப் பெற்று 3 இலக்குகளால் வெற்றி பெற்றனர்.

எம்.நிவாசன் ஆட்டம் இழக்காமல் 36 ஓட்டம், சி.அனோஜன் 31, ஏ.பிரிவிராஜ் 13 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தனர்.

பந்து வீச்சில் ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரி அணி சார்பில் முறையே செ.திவாகரன் 2, ரஸ்மின் 2, டெரன்ஸ் 1 ஆகியோர் சிவானந்தாவின் இலக்குகளை வீழ்த்தினர்..

இப்போட்டியில் சிறந்த களத்த தடுப்பாளராக சி.அகில்ராஜ் (இ.க), சிறந்த பந்து வீச்சாளராக எம்.நிவாசன், பந்து வீச்சாளர் வை.சசிகரன், போட்டி நாயகனான எம்.நிவாசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டு விருது வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

(செய்தி - கதிரவன்- படங்கள்: அர்ஜுன், அருணன்,









## கிழக்கு மாகாண எல்லே பெண்கள் போட்டியில் அம்பிளாந்துறை கலைமகள் வித்தியாலயம் முதலிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சர்வதேசச் செய்திகள்

## முகத்தை மூடிக்கொண்டு பண உதவி

தன் முகத்தை காண்பிக்காமலேயே நன்மை செய்யும் ஒருவர், சான் பிரான்ஸிஸ்கோவில் பல இடங்களில் உறைகளில் பண நோட்டுக்களை ஒழித்து வைத்து வேண்டுமானவர்களை தேடி எடுக்கச் சொல்லியிருக்கிறார்.
இது பலருக்கு குஷியை கொடுத்திருக்கிறது.
அந்தப் பண உறைகளை எங்கே கண்டு பிடிக்கலாம் என்று சமூக வலைத்தளங்கள் மூலம் சிறு சிறு குறிப்புகளையும் அவர் கொடுத்து வந்திருக்கிறார்.
இந்தச் செய்தி எங்கும் பரவவே, லட்சக் கணக்கானவர்கள் அந்தப் பண உறைகளை தேடத் தொடங்கி விட்டார்கள்.

## புதையல் தங்கம் ஏலத்தில்....

அமெரிக்காவின் கலிபோர்னியாவில் ஒரு தம்பதியருக்குக் கிடைத்த தங்க நாணயப் புதையல் இந்த வாரத்திலிருந்து ஏலத்தில் விடப்பட்டுவருகிறது.

இந்த ஏலத்தில் இதுவரை சுமார் 20 லட்சம் டாலர்களுக்குப் புதையல் நாணயங்கள் விலை போயிருக்கின்றன.வட கலிபோர்னியாவில், தங்களுக்குச் சொந்தமான நிலத்தில் ,கடந்த ஆண்டு தங்களது நாயுடன் நடைப்பயிற்சி செய்து கொண்டிருந்த இந்தத் தம்பதியர், துருப்பிடித்துக்கொண்டிருந்த எட்டு உலோகப் பெட்டிகளில் இந்தப் புதையல் கிடைத்தது.

இந்தப் பெட்டிகளில் 1,400 தங்க நாணயங்கள் இருந்தன.

இவை எல்லாம் 19ம் நூற்றாண்டில் அமெரிக்காவில் நடந்த தங்க வேட்டையின் போது புத்தம்புதிதாகத் தயாரிக்கப்பட்ட நாணயங்கள்.

சேடில் ரிட்ஜ் புதையல் என்று அழைக்கப்படும் இப்புதையல்தான் அமெரிக்காவில் கிடைத்ததிலேயே மிகவும் மதிப்பு வாய்ந்த புதையலாகும்.

இந்தப் புதையலைக் கண்டெடுத்தத் தம்பதியரின் பெயர்கள் இதுவரை வெளியிடப்படவில்லை.



புதையலைக் கொண்ட தகரப் பெட்டி

## 20 லட்சம் குழந்தைகள் சீனாவில் பிறக்கும்....


சீனாவில் குடும்பக் கட்டுப்பாட்டுச் சட்டங்களை தளர்த்துவதற்கு எடுக்கப்பட்டுள்ள முடிவினைத் தொடர்ந்து, அந்நாட்டில் ஆண்டுதோறும் மேலதிகமாக 20 லட்சம் குழந்தைகளை பெறுவதற்கு வசதியாக அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்துள்ளது.
இதற்காக மருத்துவமனைகளில் அதிகளவில் கட்டில்களையும் பிரசவ-அறைத் தாதிமாரையும் அரசாங்கம் வழங்கவுள்ளது.

## பதிவியேற்றதும் சர்ச்சையில் சிக்கிய இந்தியப் பிரதி அமைச்சர்

காஷ்மீர் மாநிலத்திற்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் இந்திய அரசியலமைப்பு சட்டப்பிரிவு 370ஐ ரத்துசெய்வதற்கு எதிர்ப்பு தெரிவிப்பவர்களை மனம் மாறச் செய்யத் தேவையான முயற்சிகளை மத்திய அரசு மேற்கொள்ளும் என்று அண்மையில் பொறுப்பேற்ற பிரதமர் அலுவலக இணையமைச்சர் ஜிதேந்திர சிங் தெரிவித்த கருத்து உருவாக்கிய சர்ச்சை தீவிரமடைந்துள்ளது.
காஷ்மீர் மாநிலத்திற்கு இந்திய அரசியலமைப்பு சட்டம் 370ன்படி வழங்கப்பட்ட சிறப்பு அந்தஸ்தின்படி, இந்திய பாராளுமன்றத்தில் இராணுவம், தகவல் தொடர்பு, வெளியுறவு விவகாரம், ஆகிய துறைகளைத் தவிர்த்து மற்ற துறைகளில் இயற்றப்படும் எந்த சட்டமும் க்மீர் சட்டசபையின் ஒப்புதல் இன்றி காஷ்மீர் மாநிலத்தில் அமலுக்கு வராது.
துணை அமைச்சரின் கருத்துக்கு காஷ்மீர் மாநில முதலமைச்சர் உமர் அப்துல்லா மற்றும் அம்மாநில மக்கள் ஜனநாயக கட்சித் தலைவர் மெகபூபா முப்தி ஆகியோர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

உங்கப் பிரதேசத்தின் விளையாட்டுச் செய்திகளை எங்களுக்கும் அனுப்புங்கள்
malaimurasu@hotmail.com

# கிழக்கிலும் வடக்கிலும் சட்டமொழுங்கு சீர்குலைந்துள்ளது



சி.ஸ்ரீதரன் நா.உ

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மிகமோசமான அளவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் கடந்த வியாழக்கிழமை (29) தெரிவித்தார்.

ஸ்ரீதரன் எம்.பி.யினால் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையிலே மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டிருந்தது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

போர் முடிவுக்கு கொண்டுவரப்பட்ட்டதாகவும் வடக்கு கிழக்கில் ஒரு சுமுகநிலை நிலவுவதாகவும் கடந்த 5 ஆண்டுகளாக இலங்கை அரசாங்கம் சொல்லி வருகின்றது. ஆனால், அதற்கு மாறான நிகழ்வுகளே தமிழர் வாழுகின்ற பிரதேசங்களில் அரங்கேற்றப்படுகின்றது.

இன்று வடக்கு கிழக்கில் மிகமோசமான அளவில் சட்டம் ஒழுங்கு சீர்குலைந்துவருகின்றது.


வடக்கு கிழக்கில் இடம்பெற்ற தேர்தல்களின் மூலம் தமிழர்கள், அரசாங்கத்திற்கு மிகத்தெளிவாக ஒரு செய்தியினைச் சொல்லி இருக்கின்றார்கள்.

அதாவது, தமிழர்கள் தமது அபிலாசைகளை முழுமையாக தமிழ்த் தேசியத்துக்கான பிரதிநிதிகளை தெரிவு செய்ததன் மூலம் தமது அடிமனதிலுள்ள தேவைப்பாட்டை அடித்துரைத்திருக்கிறார்கள்.

ஆனால் இந்த மக்களின் ஜனநாயக தீர்ப்பினை

## இளந்திரையனின் Q திரைப்படம் ஆஸியில் வெளியீடு

(உதயகாந்த்)




## இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் கிழக்கு மாகாண ஆளுனரைச் சந்தித்தனர்

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்குக் கிளையினர் கடந்த 28ம் திகதி கிழக்கு மாகாண ஆளுனரைச் சந்தித்து 'ஆசிரியர்கள் எதிர் கொள்ளும் முக்கிய பிரச்சனைகள் தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர். இலங்கை ஆசிரியர் சங்கத்தின் கிழக்கு மாகாணச் செயலாளர் திரு.எஸ். ஜெயராயாவின் தலைமையில் சென்ற ஆசிரியர் சங்கப் பிரதிநிதிகளுக்கும் ஆளுனருக்கும் இடையே சுமுகமாக நடைபெற்ற கலந்துரையாடலில் கிழக்கில் நிலவும் கல்வி நிர்வாக சேவை வெற்றிடங்களை நிரப்புவதற்கு

# 200 ஆண்டுகளைக் கடந்தது மட்டக்களப்பு மெதடிஸ்ட் மத்திய கல்லூரி





மட்டக்களப்பு, மெதடிஸ்த மத்திய கல்லூரியின் 200வது ஆண்டு நிறைவையொட்டிய கிழக்கு மாகாணம் தழுவிய வாகன பவனி கடந்த 29 காலை வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மெதடிஸ்த மத்திய கல்லூரியின் உள்நாட்டு, வெளிநாட்டு பழைய மாணவர்களின் கிளைகள் இணைந்து இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தது.

பாடசாலையின் முன்றிலில் நிகழ்வுகள் ஆரம்பிக்கப்பட்டு. வாகன ஊர்தியானது காந்தி சதுக்கத்துக்கு சென்று அங்கு நிகழ்வுகள் நடைபெற்றன.

மட்டக்களப்பு பொது நூலகத்திற்கு முன்பாக நிறுவப்பட்டுள்ள மட்டக்களப்பு மெதடிஸ்த மத்திய கல்லூரியின் ஸ்த்தாபகர் அருட்தந்தை வில்லியம் ஓல்டின் உருவச்சிலைக்கு பாடசாலையின் தற்போதைய அதிபர் மற்றும் முன்னாள் அதிபர்கள் மலர் மாலை அணிவித்தனர்.

13

# மைக்கலைற் கிராண்ட் எக்ஸ்போ 2014



மட்டக்களப்பு புனித மைக்கேல் கல்லூரியின் மைக்கலைற் கிராண்ட் எக்ஸ்போ 2014 கண்காட்சி கடந்த 29ம் திகதி காலை திறந்துவைக்கப்பட்டது.

இக் கண்காட்சி நாளை மாலை வரை நடைபெறவுள்ளதாக ஏற்பாட்டுக்குழுவினர் தெரிவித்தனர்.

முதல்நாள் நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ.நிசாம் கலந்துகொண்டதுடன் மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.கோவிந்தராஜா, அருள்திரு போல் சற்குணநாயகம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இரண்டாம் நாளில் மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி பி.எஸ்.எம்.சார்ளஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். கௌரவ மற்றும் சிறப்பு அதிதிகளாக, மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளர் எம்.உதயகுமார், மண்முனை வடக்கு பிரதேச செயலாளர் வி.தவராஜா, மட்டக்களப்பு வலயக் கல்விப் பணிப்பாளர் கே.பாஸ்கரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.கோவிந்தராஜா, அருள்திரு போல் சற்குணநாயகம் ஆகியோர் கலந்து கொள்கின்றனர்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசியப்பாடசாலையாக தரமுயர்த்தப்பட்டு 20 வருடங்கள் நிறைவடைவதை முன்னிட்டும்......





## "என்னைப் பெண் என்று நினையாதே" ஆவணப்பட வெளியீடு

கடந்த 26.05.14 திங்களன்று இனத்துவ கற்கைகளுக்கான சர்வதேச நிலையம், பெண்கள் ஊடகக்கூட்டமைப்பு மற்றும் விழுது ஆற்றல் மேம்பாட்டு மையம் என்பவற்றின் ஏற்பாட்டில் மேற்படி "என்னை பெண்னென்று நினையாதே" -ஒரு தேர்தல் கதை எனும் தலைப்பிலான ஆவணப்பட வெளியீடு திருமலை நகர சபை மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வுக்கு கிழக்கு மாகாண எதிர்கட்சி தலைவர் திரு.சி.தண்டாயுதபாணி அவர்கள் பிரதம விருந்தினராக . கலந்து கொண்டார்.மேலும் சிறப்பு விருந்தினராக திருமலை நகர பிதா திரு.சு.செல்வராஜா அவர்களுடன் சமூக சேவைகள் திணைக்கள மாவட்ட உத்தியோகத்தர் திருமதி.பிரகலதா, ஊடகவியலாளர் யதீந்திரா மற்றும் பெண்கள் அமைப்புகள் அரச சரா நிறுவன பிரதிநிதிகளுடன், நகரசபை, பிரதேச சபை உறுப்பினர்களும் பங்குகொண்டனர். குறிப்பாக இவ் ஆவணப்பட வெளியீடானது பெண்கள் அரசியலில் முன்வர வேண்டியதை தொனிப்பொருளாக கொண்டதாகும். விசேடமாக கிண்ணியாவில் கடந்த பிரதேச சபை தேர்தலில் ஐக்கிய தேசிய கட்சியில் போட்டியிட்ட திருமதி.சம்சுதீன் ஜனுன் பீபீ என்பவரின் அனுபவம் பற்றிய தொகுப்பே இவ் ஆவணப்படமாகும்.

(கலாரதன்)



எதிர்வரும் வாரம் முதல்........
சம்பூர் சதீஸ் எழுதிய
கொட்டியாபுரம்
வரலாற்றுக் குறுநாவல்
கி.பி 1600 – 1700 ம் ஆண்டுகளில்
கொட்டியாபுரத்தில் கோலோச்சிய வன்னிமையின் கதை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org